# முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி..

முரசு 2 | சென்னை | 24-6-55 | வெள்ளி | ஒலி 13




மாரீசனைத் துரத்திச்சென்ற ராமனிடம் லக்ஷ்மணனையும் அனுப்பிவிட்டு சீதை தனியாக இருக்கும்போது, அங்கே சந்யாசி உருவில் ராவணன் வருகிறான். லக்ஷ்மியின் அவதாரமான சீதை அவனைத் துறவியென நம்பி உபசரிக்கிறாள். அவன் இச்சையை வெளியிடுகிறான். சீதை நடுங்கி, கோபிக்கிறாள். பிறகு என்ன ஆகிறது? — ஆச்சாரியார் எழுதுகிறார், படியுங்கள்.

"மாறுவேஷம் நீக்கிவிட்டுத் தன் நிஜ ரூபத்தைத் தரித்துக்கொண்டான். அவள் தலைமயிரை ஒரு கையில் பற்றி மற்றொரு கையால் அவளைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு வனத்துக்குள் வேகமாகச் சென்று ஆயத்தமாக இருந்த தேரில் சீதையைத் தூக்கியவாறு ஏறி ஆகாயத்தில் கிளம்பிவிட்டான்"

30—1—55 — 'கல்கி'

அப்படிப் போகும் வழியிலே ஜடாயு என்ற கழுகு எதிர்த்துப் போர் செய்யவே, ராவணனுடைய ரதம் உடைந்துவிடுகிறது. பாவம்; அந்த ஜடாயு போர் செய்யாமல் இருந்தாலாவது, ராவணன் சீதையை ரதத்திலேயே வைத்துத் தூக்கிக்கொண்டு போயிருப்பான். அது போர் செய்து ரதம் உடைந்துவிட்ட காரணத்தால், ராவணன் சீதையைத் தன் மெய் சேர அணைத்து, இறுக்கிப் பிடித்து, பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பிரயாணம் நடத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. ஒரு குலமகள்—ஆச்சாரியார் சொல்கிறபடி அவதாரத் திருமகள்—அவளை ஒருவன் சேர்த்தணைத்துத் தூக்கிக்கொண்டு போகிறான். அந்த நேரத்தில் தான் போகும் பாதையை அடையாளம் காட்டுவதற்காக சீதை ஒரு தந்திரம் செய்கிறாளாம். அந்தத் தந்திரம் எவ்வளவு கேவலமானது என்பதை வாசகர்களே யூகித்துக்கொள்ள வேண்டும். ஆச்சாரியார் வாசகத்தை அப்படியே தருகிறேன்; படியுங்கள்:

"பல மலைகளையும் ஆறுகளையும் தாண்டிச் செல்லும்போது வழியில் ஒரு மலைமேல் யாரோ நிற்பதைக் கண்டாள் சீதை. அப்பொழுது மேலுத்திரியத்தை எடுத்துத் தன் ஆபரணங்களை அதில் முடித்துக் கீழே போட்டாள்."

6—2—55 — 'கல்கி'



மாற்றானின் பிடியிலே சிக்கியிருக்கிறாள்; தன் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று துடிக்கிறாள் என்றும் ஆச்சாரியார் கூறுகிறார். இந்த நிலையில் எந்தப் பெண்ணாவது, தனது மேலாடையை எடுத்துக் கீழே போடுவாளா? — போடலாமா? — அப்படிப் போட்டால் அது எதற்கு அறிகுறி? — குலப் பெண்ணுக்கு அடையாளமா அது?.

சாதாரணமாக ஒரு ஆடவன், ஒரு பெண்ணைப் பார்த்தால், அந்தப் பெண்ணையுமறியாமல் அவளுடைய கை, அவளது மேலாடையை சரியாகப் போர்த்தித் திருத்தி விடுகிறது. அத்தகைய நாண உணர்ச்சி தலைகாட்டுகிறது. சொந்தக் கணவனைக் காணுகிற நேரத்திலே கூட பெண்கள், தங்கள் மேலாடையைத் திருத்திக் கொள்ளத் தவறமாட்டார்கள். சீதையோ, அந்நிய புருஷனின் கையிலே அகப்பட்டு எடுத்துச் செல்லப்படுகிறாள். அந்த நேரத்திலே மேலாடையை சர்வசாதாரணமாக எடுத்து கீழேவீசுகிறாள் என்றால், அவளைப் பற்றி நாம் என்ன நினைப்பது? ராவணன் தான் என்ன நினைத்திருப்பான்?

"அண்ணன் செத்தால் அண்ணி கிட்டுவாள் என்று பார்க்கிறாயா?" என்று லக்ஷ்மணனைப் பார்த்துக் கேட்கிறாள். இப்போது, வேறு மனிதனின் அணைப்பிலே இருந்து கொண்டு, அவளாகவே மேலாடையைக் கீழே போடுகிறாள். இந்த இரு செய்திகளும் சீதையின் நிறையை எந்த அளவுக்குக் குறைக்கின்றன என்பதை ஆஸ்திகப் பெருமக்களே சிந்தித்துப் பார்க்கட்டும். பெண்களின் நாயகம் சீதை என்று கூறுகிற தாய்மார்களும் இந்த இரு கட்டங்களையும் ஆராய்ந்து பார்க்கட்டும்.

ஆனால் ஆச்சாரியாரோ, சீதை செய்த தவறுகள் சீதையோடு போகட்டும் என்றிராமல், அவரே பெரும் தவறு செய்கிறார், இதோ :

நம் நாட்டில் துயரப்படும் பெண்கள் அனைவரும் சீதா தேவியின் அம்சம்.

6-2-55—'கல்கி'

என்று வர்ணிக்கிறார். துயரப்படும் பெண்கள் எல்லாம் சீதையின் அம்சமாம்! என்னே கொடுமையான வெட்கக்கேடு! என்னே கேவலமான வியாக்யானம்!!

நாட்டில் அழுது கொண்டிருக்கும் பெண்கள் எல்லாம் அயலவன் பிடியிலேயிருந்து மேலாடையைக் கீழே போட்டவர்களா? "அண்ணன் போனால் தம்பி பார்க்கலாம் என்று திட்டம் போடுகிறாயா?" என்று தங்கள் கொழுந்தர்களைப் பார்த்துக் கேட்டவர்களா? துயரப்படும் பெண்கள் எல்லோருமே சீதை அம்சமாமே; பிறரால் களவாடப் பட்டவர்களாமே; கணவன் ராமனின்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# வேதனை துளைக்குது! - - - - வெண்புறா பறக்குது!!

**அன்புள்ள குமார்,**

சென்ற வாரம் பத்திரிகையிலே நீ பார்த்திருக்கலாம்; ஜப்பானிலே ஒரு மாமிச மலையை குத்துச் சண்டை வீரனாகப் பழக்கிக் கொண்டிருக்கிறார்கள். பதிமூன்றே வயதுதானாம் அந்தப் பையனுக்கு! ஆனால் அவனது எடை **261** ராத்தலாம்!

பள்ளிப் பருவத்திலேயே பர்வதம்போலக் காட்சியளிக்கிறான்! அவனைத்தான் அகில உலகச் 'சாம்பியன்' ஆக்கத் திட்டம் போடுகிறார்களாம்!

இந்தச் செய்தியைப் படித்ததும் உன் போன்றோருக்கு இந்தக் குடியரசை அந்தப் 'பாலபயில்வா'னுக்கு ஒப்பிடத் தோன்றும்!

'ஏழே ஆண்டுகள்தான் ஆகின்றது சுதந்திரக் குழந்தை பிறந்து! அதற்குள்ளாக இமயம் அளவிற்கு வளர்ந்துவிட்டானே!'—என்று உன்போன்றவர்கள் பூரிப்படையலாம்!

இரும்புத் திரையைக் கிழித்தெறிந்துவிட்டு மோதிலால் மைந்தர் சூறாவளி வேகத்திலே சுற்றுப் பயணம் நடத்துகிறார்.

அமெரிக்கக் கைதிகளுக்கு விடுதலை வழங்கி பீக்கிங்கிலே கிருஷ்ணமேனன் துந்துபி முழக்கியிருக்கிறார்!

— இவையெல்லாம் பெருமைப் படத்தக்க சாதனைகளல்லவா என்று கேட்கிறாய்!

ஆமாம்; ஒப்புகிறேன்!

வெளிநாடுகளிலே இன்னொரு நாட்டின் புகழொளி தெரிவது பூரிப்படைய வேண்டிய செய்திதான்!

சமாதானம் வேண்டித் தவிக்கும் பிற நாடுகளுக்குக் கலங்கரை விளக்கம் காட்ட வேண்டியது அவசியம்தான்!

ஆனால், அந்தக் கலங்கரை விளக்கம் செய்ய உள்நாட்டிலே உள்ள கூரைகளுக்கு தீ வைப்பது நியாயமா?

புதுமணம் பரப்பும் அத்தரை பூவின் இரத்தம் என்பார்கள்! நேரு வெளிநாடுகளிலே பூசி வரும் 'புகழ்ச் சந்தனம்', இங்கு காட்டகத்திலே வளர்ந்தோங்கியிருக்கும் மரங்களைப் பாழாக்கியல்லவா தயார் செய்யப் பட்டிருக்கிறது!

உள்நாட்டிலே அவரது துரைத்தனம் எழுப்பியிருக்கும் நாற்றத்தை மறைப்பதற்காக அல்லவா அவர் செண்டு பூசிக் கொள்கிறார்!

அவர் ரஷ்யா செல்வதற்கு முன், பூனாவிலே அவர் செய்த பிரசங்கத்தைப்படித்திருந்தால் இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கையால் விளையும் கொடுமைகள் உனக்குப் புரிந்திருக்கும்!

கோவாவிலே கிளம்பியிருக்கும் கொந்தளிப்பைப் பற்றி அவர் குறிப்பிடும் போது, "சிலர் கோவாமீது போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அது தவறானது. இந்தியா அனுஷ்டிக்கும் சமாதானக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டது. இந்தியா எந்த விதப் பிரச்னைக்கும் அமைதியான முறையிலேதான் சாந்தி காணும்"—இப்படிப் பேசியிருக்கிறார், இந்தியாவின் முதல்வர்!

விடுதலை கோரும் மக்களை இளித்தவாயர்களென்று நினைத்துக்கொண்டு 'ஏகாதிபத்தியக் குஞ்'சொன்று ஆட்டம் போடுகிறது—அதை அடக்குவதற்கு போலீஸ் நடவடிக்கை கூடாதென்கிறார்!




போர்ச்சுகீசியர் புரிந்து வரும் கொடுமைகள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. அலைகளை அடக்க நினைக்கும் மதியீனனைப் போல, எழுச்சி கொண்ட மக்களை நசிக்கிப் போட நினைக்கிறார், சர்வாதிகார தர்பார் நடத்தும் **சலாசர்!** அதை ஒடுக்குவதற்கு இந்தியா எந்த வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாதாம்! பிரதமர் சொல்லுகிறார், "இந்தியாவிலிருந்து தொண்டர்கள் நுழைவதை நான் விரும்பவில்லை. கோவா விடுதலைக்கு கோவா மக்களே போராட வேண்டும்!"— ஆட்சிபீடமேறிகள்தான் இப்படியெல்லாம் பேசுகிறார்கள்!

போர்ச்சுகீசியத் திட்டிலே வேதனைப் படுவோரை மறந்து விட்டு வெள்ளைப் புறாவைக் கையிலேந்தி நிற்கிறார், வெள்ளையனை வெளியேற்றிய தீரர்!

போலீஸ் நடவடிக்கை ஏன் கூடாதாம்? கோவா பாரத மாதாவின் அங்கமல்லவா? அப்படியானால், போர்ச்சுகீசியப் பிரபுக்கள்தான் அந்தத் திட்டுக்குச் சொந்தமானவர்களா?

அல்ல; அல்ல!

இந்தியாவின் பகுதிதான் கோவா என்பதைக் கோபுரமேறி கர்ஜிக்கிறார், நேரு! பின்னர் ஏன், அவர் போலீஸ் நடவடிக்கை கூடாதென்கிறார்?

அகில உலகமெங்கும் பரவி வரும் இந்தியாவின் சமாதானக் கொள்கை சமாதியடைந்து விடுமாம்! பஞ்சசீலக் கொள்கை பழுதடைந்து போய் விடுமாம்!

இந்தநேரத்திலேதான், குமார், இந்தியப் பிரதமர் இத்தனை ஆண்டு காலமாகப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த வெளி நாட்டுக் கொள்கை நடந்து வந்திருக்கும் பாதையை, நீ கொஞ்சம் திரும்பிப் பார்க்க வேண்டும்!

காஷ்மீரத்திலே நடந்த கதை உன் நினைவுக்கு வருகிறதா?

சுதந்திரக் குழந்தை அப்போதுதான் பிறந்திருக்கிறது; பிரசவ வேதனைகூட தாய்க்கு பூரணமாகக் குறைந்தபாடில்லை. காஷ்மீரத்திலே குழப்பம் என்றதும் அந்தக் குழந்தை என்ன செய்தது?

சமாதான வழியிலே பிரச்னைக்கு முடிவு கட்டவேண்டுமென்று பிரார்த்தனை செய்ததா?

'நடப்பது நடக்கட்டும்; நீதிக்கு என்றுமே அழிவில்லை'—என்று தத்துவம் பேசி காந்தியார் வகுத்துக் கொடுத்தத் தார்மீக வழியிலே பீடு நடை போட்டதா?

இல்லை; பின்னா நடந்தது என்ன?

கோடி கோடியாக இந்திய மக்களது வரிப் பணத்தைக் குவித்து இராணுவ நடவடிக்கையல்லவா எடுத்தார், அமைதி விரும்பும் அலகாபாத் வீரர்!

சேர்ந்து வாழ்ந்தோமே—என்ற பாச உணர்ச்சிகூட இல்லாமல் பாகிஸ்தான் படையினரோடு பண்டிதரின் படைகள் மோதில!

அப்பொதெல்லாம் பயப்படாதவர் இன்று போர்ச்சுகீசியர் மீது பரிதாபம் காட்டுவானேன்!

அது மட்டுமா? அயிதராபாத் நிஜாம் அடங்காப்பிடாரியாக மாறிய போது, இந்த அகிம்சா மூர்த்திதான் போலீஸ் நடவடிக்கை எடுத்து, அவரைப் பொட்டிப் பாம்பாக்கினார்!

நிஜாமை எதிர்த்து போலீஸ் நடவடிக்கை—

சலாசரை எதிர்த்து சமாதானக் கொள்கை—

ஏனிந்த முரண்பாடு? 'அரசனை நம்பிப் புருஷனை கைவிட்டதாக்' பழமொழியொன்று சொல்வார்கள்! அதைப் போல வெளி நாட்டிலே கிடைக்கும் வரவேற்புக்காகவும் விளம்பரத்துக்காகவும், கோவாவிலே கிளம்பியிருக்கும் புண்ணுக்கு சமாதானப் புனுகு தடவலாமா?

புலியின் குகையிலே சிக்கித் தவிக்கும் கோவா மக்களுக்கு தாயகம் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை காணும் இந்தியஅரசு கைகொடுத்துக் காப்பாற்ற வேண்டாமா?

இதையெல்லாம் விட்டு கோவா விஷயத்திலே நேரு ஏன் பாராமுகமாயிருக்கிறார்? காஷ்மீரத்து ராணுவ நடவடிக்கையையும், அயிதராபாத் போலீஸ் நடவடிக்கையையும் மக்கள் அவ்வளவு விரைவில் மறந்து விடுவார்கள் என்று பண்டிதர் நினைத்து விட்டாரா?

நீயே யோசித்துப்பார், குமார்! பண்டிதர் கடைப்பிடிக்கும் வெளி நாட்டுக் கொள்கையின் 'பவிஷு' தெரிந்து விடும்.

**அன்புள்ள,**
**பொன்முடி**

# இந்துஸ்தானத்தின் இணையற்ற ஏந்தலும், பாரதமாதாவின் சீமந்தப் புத்திரருமான

# காம்ரேட் நேரு அவர்களை

## மாஸ்கோவிலிருந்து இந்தியாவுக்கு வழியனுப்பிய காலை ரஷ்ய மக்கள் மாஸ்கோ டைனமோ ஸ்டேடியத்தில் வாசித்துக் கொடுத்த

# பிரிவு உபச்சாரப் பத்திரம்

### காந்தியின் வாரிசே! சச்சரவு தொலைத்து சாந்தி காணத் துடிக்கும் செல்வமே!

வருக! வருக! நும் வருகையால் எம் இரும்புத் திரையிலே தங்க மெருகு ஏறியது! நும்மையும், நும் அருமைத் திரு மகளையும் பார்க்கும்போது பாரத் மாதாவே மனமுவந்து–மகிழ்ச்சி பொங்க தம் குடும்பத்தையே அனுப்பிவைத்து சோவியத் வாசிகளைக் கௌரவிப்பதாக உணர்கிறோம்—களிபேருவகை அடைகிறோம்! அடுத்தமுறை வரும்போது இந்தியப் படிப்பு கூடாதென்று சீமையிலே படிக்கும் உங்கள் பேரக் குழந்தைகளையும், அருள்கூர்ந்து அழைத்துவர வேண்டுமென்று எங்கள் அடக்கமுடியாத உள்ளக் கிடக்கையை வெளியிட்டுக் கொள்கிறோம்.

### ஆசியாவின் அணையா விளக்கே! அகிம்சா மூர்த்தியே! அன்பால் அரசு புரியும் அலகாபாத் வீரரே!

நும் தாயின் ஒரு அங்கமாம் கோவாவிலே சுதந்திரத் தீகொழுந்துவிட்டு எரிகிறது! பக்கவாத நோயால் பாரதமாதா படுக்கையில் கிடக்கிறாள் அதுமட்டுமா? பஞ்சாபிலே உள்ள சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றனவாம்! அகாலிகள் அகாரணமாகத் தொடுத்திருக்கும் அறப்போரை சமாளிக்க முடியாது நும் சீடர்கள் திண்டாடித் தெருவில் அலைகிறார்களாம்.

### சத்யாகிரகம் கண்ட சர்வகால வல்லவனே!

பஞ்சாபிலே பார்வையைச் செலுத்தாமல்—கோவாப் பிரதேசத்திலே காலெடுத்து வைக்காமல்—ஒரே தாவாகத்தாவி மாஸ்கோவுக்கு வந்து குதித்துவிட்டீர்கள்—மகிழ்கிறோம்! சொந்த நாட்டுப் பிரச்சினைகளை ஒதுக்கிவைத்துவிட்டு—எங்கள் மீது கருணை வைத்து ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருக்கிறீர்கள்!

உங்கள் வீட்டுத் தீயை அணைக்கக்கூட நேரம் காணமுடியாமல் கருங்கடலில் காற்றுவாங்க வந்த நேரு துரையே! என்னே நீங்கள் சோவியத்மீது வைத்திருக்கும் பாசம்! ரஷ்யா மீது என்னே உங்கள் பற்று! என்னே உங்கள் 'பெரிய மனசு'! வாழ்க உங்கள் விசால நோக்கம்!

### பாட்டாளி வர்க்கத்தை வாழ்விக்க வந்த பெருமானே! உழைப்பாளிக் கூட்டத்தின் தோழனே! உலகத் தொழிலாளிகளின் ஒப்பிலா நண்பனே!

மாசேதுங் மாஸ்கோ வந்தபோது இல்லாத வாழ்த்துக்களை—வரவேற்பை நும்மீது குவிக்கிறோம்! சூ-என்-லாயுக்கு சூட்டாத பூமாலையை நும் மணிக் கழுத்துக்குப் பூட்டி மகிழ்கிறோம். ஏன்? பாட்டாளிகள்பால் நீர் வகுத்துக்கொண்ட 'பாலிசி'தான் அதற்குக் காரணம்!

கான்பூரிலே நாற்பது நாட்களாக நாற்பதினாயிரம் தொழிலாளிகள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்களாம்! முன்னூறுக்கு மேற்பட்டவர்கள் காராக்கிரகத்திலே கண்ணீர் வடிக்கிறார்களாம்! நன்று; நன்று நும் நாகரிகப் போக்கு!

கான்பூரிலே நீர் கடைப் பிடித்த கொள்கை காட்டுத் தீயென இந்தியா எங்கும் பரவட்டும்! ஆசியா முழுவதும் ஆதவன் போல ஒளி பரப்பட்டும்—இதுபோன்ற உன்னத நோக்கம் உங்களிடையே பரவுமானால் மாஸ்கோ டைனமோ ஸ்டேடியத்தில் அடுத்த முறை நீங்கள் வரும்போது, நிச்சயம் 'லெனின் பதக்க'த்தை உங்களுக்கு அளிக்கத் தயங்கமாட்டோம்!

### 'சோஷலிச பாணி' கண்ட சமதர்மச் சூரியனே! பொதுவுடமை கோரும் பொக்கிஷமே! பூர்ணச் சந்திரனே!

பாண்டுங்கிலே தூங்கிக் கொண்டிருக்கும் ஆசிய நாடுகளைத் தூக்கி நிறுத்த துந்துபி முழக்கினீர். அடிமைப்பட்ட நாடுகளின் சார்பாக உரிமைக் குரல் கொடுத்தீர்—ஆனால் உங்கள் நாட்டின் தென்பகுதிக்காரர்கள் தனித் திராவிடம் கேட்கிறார்களாம்—கிடக்கிறார்கள் பைத்யக்காரர்கள்! அவர்கள் கோரிக்கையைக் காதில் போட்டுக் கொள்ளாத கண்ணியவானே வெகுஜன நோக்குக்கு மதிப்பளிக்கும் விவேகியே! உங்கள் 'அகில உலகக் கண்ணோட்ட'த்துக்காக எங்கள் கண்ணீர்த்துளிகளை உங்கள் பாத காணிக்கையாக்குகிறோம்!

### பாரத கலாச்சாரத்தின் பாதுகாவலனே!

முடிவிலே ஒரே ஒரு வேண்டுகோள். எங்களைவிட பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் முதிர்ச்சி பெற்ற உங்கள் நாட்டுக் கலாச்சாரத்திலிருந்து நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம்! எனவே அடுத்த முறை நீங்கள் இங்குவரும்போது உங்கள் அருமைச் சோதரியார் விஜயலட்சுமியாரின் பெருமைமிகு புத்திரிகளையும் கூட அழைத்து வாருங்கள். அந்த நடனகலா ராணிகளால் உங்கள் பாரதப் பண்பாடு பன்மடங்கு பெருகி விரியும்—இலங்கை பெற்ற பாக்யம் இந்த மண்ணும் பெற வழி செய்யுங்கள்!

அப்படியே டெல்லி திரும்பியதும் காம்ரேடுகள் அஜாய் கோஷ், ராமமூர்த்தி, ஜீவானந்தம் ஆகியோருக்கும் எங்கள் விசாரிப்பைத் தெரியப்படுத்துங்கள்.

[ஆசிரியச் சந்த விருத்தம்]

ஏறு பிளேனில் ஏறி வாஷிங்டன் சென்ற முக மொன்றே!
ஏறுநிகர் புல்கா(னி)னைச் சந்தித்த முக மொன்றே!
கூறும் சோஷலிசச் சிந்துபடித் தீர்க்கு முக மொன்றே!
குன்றனைய பாட்டாளை கைக் குலுக்கு முக மொன்றே!
மாறுபடு கம்யூனிஸ்டை (சேலத்தில்) வதைத்த முக மொன்றே!
மாஸ்கோவை மணம்புணர வந்த முக மொன்றே!
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்!
ஆதி பாரதம மர்ந்த அலகாபாத் பெருமானே!

(அருணகிரிநாதரும், திருப்புகழ் படிக்கும் திருத் தொண்டர்களும் மன்னிப்பார்களாக!)

இங்ஙனம்,

ஐக்கிய சோவியத் சோஷலிசக் குடியரசின் பிரஜைகள்.

[...னை]

# விபசார வனிதை

## முல்லை - சத்தி

"கனம் நீதிபதி அவர்களே! தூண்டில் சிக்கிய மீனைப் போல கூண்டிலே நிற்கிறாளே சொர்ணம், அவள் விபசார தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவள். சுழலும் கண்களால் சாலையில் போவோரை விபசாரத்திற்கு அழைத்தாள் எனக் குற்றம் சாட்டப் பட்டவள். அவள் விபசாரம் செய்தாள் என்பதற்கு போதிய சாட்சியங்கள் இருக்கின்றன. தமிழகத்து பெண்ணினத்திற்கு களங்கம் உண்டாக்கும் இத்தகைய நடத்தை கெட்டவர்களை, மிகவும் கடுமையாக தண்டிக்க வேண்டும், மற்றவரும் இதுபோல் குற்றம் செய்யாமலிருப்பதற்காக. இவளுக்கு அளிக்கப்படும் தண்டனை, இழி குணம் கொண்டவர்களுக்கு எச்சரிக்கையாகவும், பாடம் புகட்டுவதாகவும் இருக்க வேண்டும் மென்பதால், கனம் நீதிபதி அவர்கள், இவளுக்கு—உடலை விற்று உடலை வளர்ப்பவளுக்கு—வானம் இருண்டதும் தன் மானத்தை விலைகூறும் இவளுக்கு தக்கதண்டனை அளிக்க வேண்டுகிறேன்"—பப்ளிக் பிராசிகூட்டர் பேசி முடித்தார்.

"நீ விபசாரம் செய்தாயா?" என்ற வினவை எழுப்பினார் நீதிபதி.

மண் மாதா மீது கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த பரிதாபத்துக்குரிய சொர்ணம், ஏறிட்டுப் பார்த்தாள். அவளின் முகத்திலே சஞ்சலமும், சந்தேகமும் சதிராடின. குளமாகியிருந்த அவளின் விழிவேல்கள் நீதிபதியைத் தாக்கின. கண்களிலிருந்து வழிந்த ஆறு அவளின் ஒட்டிய கன்னங்களில் கோடிட்டு ஓடியது.

"ஆமாம்; நீதிபதி அவர்களே, நான் விபசாரம்தான் செய்தேன்! வயிற்றுப் பசியை போக்கிக் கொள்ள உடல் பசிக்காரனுக்கு என் உடலை விற்றேன். வறுமை என்னும் வயலில் வளருவது தானே விபசாரம்!..."

அந்த மன்றத்தில் உள்ளவர்களெல்லாம், இதுவரை இதுபோல ஒருபெண்—அதுவும் குற்றவாளிக் கூண்டிலே நிற்பவள்—பேசிக் கேட்டதில்லை. நீதிபதியும், கண்ணாடியைக் கழற்றி தன் முகத்தை துடைத்துக் கொண்டார்.

"விளக்கம் தேவையில்லை—நீ குற்றவாளிதானே?"—அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

"வயிற்றுப் பசிக்காக உடலை விற்ற நான் குற்றவாளியானால், உடல் பசிக்காக என்னைத் தேடி வந்தவர்களும் குற்றவாளிகள் தானே! கண்ணெனத்தகும் பெண்களின் மீதுதான் விபசாரக் குற்றம் சுமத்தப்படுகிறதே தவிர, மங்கையர் குலத்தின் தேனை உண்டு களிக்கும் வண்டுமனம் கொண்ட ஆணினத்தின்மேல் ஏன் குற்றம் சுமத்தப்படுவதில்லை? தொட்டு தாலி கட்டிய கட்டிளம் மனைவியைக் கட்டிலிலே தூங்க வைத்துவிட்டு, தோட்டத்துக் கதவைத் திறந்து வேறு மலரைத் தேடி ஓடும் கணவன்மார்கள் இல்லையா இந்நாட்டில்? தோட்டத்து மலரை வாடச்செய்து, காட்டு மலரைத் தேடி அலைபவர்கள் ஏராளம். "தேனே! தெவிட்டாத இன்பமே! மானே; மருளாதே! அருகில் வா! அணைத்து ஒரு முத்தம் தா! காலமெல்லாம் இணைந்து வாழ்வோம்! கண்ணே! கனிரசமே! காதல் நெருப்பால் எரியும் என் நெஞ்சத்தை, உன் தளிர்க் கரங்களால் தடவி, குளிரச் செய், என் கோமளமே! நீ இல்லை என்றால் எனக்கு வாழ்வு இல்லை; இவ்வையகத்தில்இடமும்இல்லை" என்று வார்த்தைகளை கவிதை நடையிலே அடுக்கி, பாலைக் குடித்தவுடன் ஓடும் பூனையைப் போல—மலரின் தேனை உண்டபின் பறந்துவிடும் வண்டைப் போல—பெண்களின் கற்பைக் கொத்திச் செல்லும் எத்தர்கள் ஏன் தண்டிக்கப் படுவதில்லை? காசைக் காட்டி—ஆசை யூட்டி—மோசம் செய்யும் சுயவர்கள் ஏன் குற்றவாளிக்கூண்டிலே நிறுத்தப்படுவதில்லை? மிரட்டியும், அதட்டியும் பெண்ணினத்தைப் பணியச் செய்யும் கண்ணியவான்களும் உண்டு!...இத்தகைய ஆண்களின் தான்தோன்றித் தர்பாரிலே, சிக்கிச் சீரழிந்தவள் தான் இந்த சொர்ணம். நான் விபசாரம் செய்தேன்; 'பணம் கொடுங்கள் பதிலாகஇன்பம்தருகிறேன்' என்றுதான் நான் என் 'தொழிலை'ச் செய்தேன். என் உடலிலே வலிவு இல்லை, உழைக்க! ஆகவே இருந்த கொஞ்ச நஞ்சப் பொலிவையும் என் முதலாக்கி தொழிலை ஆரம்பித்தேன். என் வலிவும்-பொலிவும் எப்படிப் போனது தெரியுமா? அதோ, நீதிபதியைக் கேளுங்கள்; விளக்கமாகக் கூறுவார்! நீதி வழங்க வேண்டிய நான் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறேன்; குற்றவாளிக் கூண்டிலே நிற்க வேண்டியவர் நீதி வழங்க வந்திருக்கிறார்! விசித்திரம்... வேடிக்கை..."

மகுடியின் மதுர கீதத்தில் மதி மயங்கும் பாம்பைப் போல், மன்றத்திலிருந்தோரும் சொர்ணத்தின் சோக கீதத்தால் மயங்கியிருந்தனர். ஆச்சரியமும், ஆவலும் மாறி மாறிப் போட்டிபோட்டன அவர்கள் முகத்தில். 'ஐயோ, பாவம்! பைத்யம் பிடித்துவிட்டது அவளுக்கு: உளறுகிறாள்'-"அவள் கூறுவதும் உண்மையாக இருக்கலாம்; எந்தப் புற்றில் எந்த பாம்பு இருக்குமோ"—என்பன போன்ற சொற்றொடர்கள் அந்த நீதி மன்றத்தில் நிரம்பி வழிந்தன. நீதிபதி மன்றத்தைக் கலைத்துவிட்டு நாளை விசாரணை தொடரும் என்றுகூறிச் சென்று விட்டார். கோர்ட்டும் கலைந்தது.

✶

### நீதிபதி

"நீதி வழங்க வேண்டிய நான் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப் பட்டிருக்கிறேன்; குற்றவாளிக் கூண்டிலே நிற்க வேண்டியவர் நீதி வழங்க வந்திருக்கிறார்! விசித்திரம் — வேடிக்கை" என்ற அவள் கூறியது கூரிய வாள் போல் என் இதயத்தில் தைத்தது. முதலில் அவளை எனக்கு அடையாளமே தெரியவில்லை. அவள் பேசப் பேசத்தான் நான் புரிந்து கொண்டேன், அவளை. அவளின் குரல்தான் எனக்குக் காட்டிக் கொடுத்தது. உருண்டு திரண்ட அவளின் தேகம் இன்று சுருண்டு சுருங்கியிருக்கிறது. கனலை எழுப்பிய அந்தக் கருவிழிகள்...இன்று புனல் சொட்டும் குழி விழுந்த கண்கள்...செந்தாமரை இதழைப் பழிக்கும் அவளின் கன்னங்கள் வாடி வதங்கிவிட்டன. முல்லைச் சரமோ—கோர்த்த முத்தோ என இருந்த அவள் பற்கள், காவி ஏறி காட்சி அளிக்கிறது. இந்நிலையில் நான் அவளை அடையாளம் தெரிந்து கொள்ளாதது ஆச்சரியம் இல்லை; அவள் மட்டும் என்னைப் புரிந்து கொண்டாள். எப்படி மறக்க முடியும் என்னை அவளால்! அவள் வாழ்வைப் பாழாக்கியவனல்லவா நான்? என்றால் கசக்கி எறியப்பட்ட ரோஜா அவள்...... இன்று மணம் இழந்து — மானம் இழந்து– குற்றவாளிக் கூண்டிலே நிற்கிறாள்... அவளா குற்றவாளி..?

★

கல்லூரி விடுமுறையைக்கழிக்க சோலையூரிலுள்ள என் அத்தை வீட்டிற்குச் சென்றிருந்தேன். வயதான என் அத்தையின் ஆசையைப்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

## விஞ்ஞானத் தேவனுக்கு வேதியரின் சமர்ப்பணம்!

பி. சி. ஜி. ஊசி குத்துவதால் யாருக்கும் எந்தவித ஊறும் கிடையாது. இதுவரை சுமார் ஒரு கோடி மக்கள் ஊசி மூலம் பி. சி. ஜி. மருந்தின் பயன் அடைந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவருக்காவது அணுவளவு பாதகமேற்படவில்லை.

—முப்பத்தைந்து நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட பி. சி ஜி. பற்றிய மாநாட்டின் ஏகோபித்த முடிவு.

1949-ம் ஆண்டு முதல் உலகமெங்கும் சற்றேறக்குறைய 1,67,25,175 மக்களுக்கு பி. சி. ஜி. குத்தப்பட்டிருக்கிறது. இதனால் யாருக்கும் இன்னலோ, இடையூறோ கிடையாது.

—சென்னை அரசினர் அறிக்கை.

பிரிட்டனிலும், ஸ்வீடனிலும் பி. சி. ஜி. ஊசி போடுவது சர்வ சாதாரண முறையாகக் கருதப்படுகிறது. அங்கெல்லாம் தேசிய சுகாதாரத் திட்டங்களிலும் பி. சி. ஜி. முறை சேர்க்கப் பட்டிருக்கிறது.

—பி. சி. ஜி. பற்றி இந்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்.

கொடுமையான க்ஷயரோகத்தால் வாடும் மக்களில் எண்பது சதவீதம் பேர் பி. சி. ஜி.யினால் மரணத்தின் வாயிலிலிருந்து தப்புகின்றனர்.

—ஒரு செய்தி.

பி சி ஜி. பயன் தராது. அதற்குப் பாதுகாப்பளிக்கும் சக்தி இல்லை. இதனால் சாதகத்தை விட பாதகம்தான் அதிகம். எனவே உடனே பி. சி. ஜி. முறையை நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!

—மருத்துவ நிபுணரின் குரல் அல்ல! மகேஸ்வரனின் குரல் கேட்டுப் பழக்கப்பட்ட ஆச்சாரியாரின் சொந்தக் குரல்—பி. சி. ஜி-யை எதிர்க்கும் ஒரே ஒரு குரல்! தோல்வியின் ஏக்கம் எதிரொலி செய்யும் ஏகக் குரல்!—குல்லுகபட்டர் குரல்!

✶

பூமிக்கும், சூரியனுக்கும் இடையே சந்திரன் எப்போதாவது குறுக்கிட்டால், சந்திரனின் நிழல் சூரியன் மீதுபட்டு அதை மறைக்க சூரியகிரஹனம் ஏற்படுகிறது.

—16-6-·5 அன்று 'இந்து' இதழில் பி. ஜி. நாராயணன் என்பவர் எழுதிய விஞ்ஞானக் கட்டுரை.

வான ஆராய்ச்சிப்படி (இந்தக் கிரஹனங்கள்) ஈன்ஸ்டினின் தத்துவத்தை சோதித்துப் பார்க்க பயன்படுகின்றன...ஒரு மதச் சார்பற்ற அரசாங்கம் கிரஹனத்துக்காக விடுமுறை வழங்குவதை அனாவசியமாகக் கருதினாலும், நம்மில் பலர் ஆயிரக் கணக்கில் குருக்ஷேத்திரத்திலும், கடற்கரையிலும், ஆற்றோரத்திலும்கூடி நம்முடைய விதியை நிர்ணயிக்கும் ஆண்டவன் மீதுள்ள பக்தியைப் புதுப்பித்துக் கொண்டோம்.

—ஜூன் 21-தேதியன்று 'இந்து' இதழின் தலையங்கம்.

# புதையல்

## மு.கருணாநிதி

> "ஏழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே...
> காக்கை மூக்கு நிழலிலே...
> கள்வர் புகும் வழியிலே...
> கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
> எழுபது கோடி பசும்பொன்... "

### 28. "பூதம்" புறப்பட்டது!

இங்கே ஆற்றங்கரையிலே அனாதையாக நின்று தவிக்கிறாள் பரிமளா. இந்தப் பரிமளாவைக் காண வேண்டுமென்று மருங்கப் பள்ளத்திலே துக்காராம் தவித்துக் கொண்டிருந்தான். தூதனாகச் சென்ற ராமன் இன்னும் திரும்பி வரவில்லையே என்று வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடந்தான். தன்னுடைய காதல் எதிர்பாராத முறையில் வெற்றி கண்டு விட்டதே என்று தனக்குத் தானே எண்ணி மகிழ்ச்சியடைந்தான். ஊரிலே பெரிய புள்ளி - வெள்ளியம்பலம் என்றாலே வெட வெடத்துப் போகிறார்கள் ஜனங்கள்- அப்பேர்பட்ட அசகாய சூரன்- கிராமீயப் பிரமுகர் - அவரே தன்னுடைய காதலியின் தலைமைத் தூதனாக அமைந்திருக்கிறார் என்றால். தன்னுடைய அதிர்ஷ்டத்தையும் பெருமையையும் எப்படித்தான் வர்ணிப்பது என்று அவனுக்கே புரியவில்லை. பட்டுக் கோட்டைக்கு வந்து தேடிப் பிடித்து, வீட்டிலே உட்கார வைத்து சாப்பாடும் போட்டு, ராஜோபசாரம் செய்து, பரிமளாவிடமும் தூதுபோய் விஷயத்தைச் சொல்லி விட்டு வந்திருக்கிறார் என்றால்-இதை விட வேறுயார் தன் காதலுக்காக இவ்வளவு அக்கறை காட்ட முடியும் என்பதை நினைத்து நினைத்து சந்தோஷப் பெரு மூச்சு விட்டுக் கொண்டான். பரிமளாவிடம் தூதுபோன ராமன் இன்னும் திரும்பி வரவில்லை.

"ராமன் அவளிடம் என்ன சொல்லியிருப்பான்? அதற்கு அவள் என்ன பதில் சொல்லியிருப்பாள்?— அவளைப் பிரிந்து, நான் அன்ன ஆகாரமின்றிக் கிடக்கிறேன் என்று சொல்லச் சொன்னேனே - அதைக் கேட்டதும் அவள் என்ன பாடுபடுவாள்? நான் பொய் சொல்லியனுப்பினேன் என்று புரிந்து கொள்வாளா?--உம்-யார் கண்டது?-அவள் என்னைக் காணாமல் எத்தனை நாளாகப் பட்டினி கிடக்கிறாளோ?- கைவளையல்கள் கழன்று விட்டதோ என்னமோ?— இந்த ராமன் நான் சொன்னதையெல்லாம் என் பரிமளாவிடம் ஒழுங்காக சொல்லியிருப்பானா?—எங்கே பார்க்கலாம்? எப்போது பார்க்கலாம்?-என்று கேட்டு வரச் சொன்னேனே; அதற்கு என்ன பதில் தருகிறாளோ? — அடகடவுளே!-நீ மாத்திரம் நினைத்த அவதாரம் எடுத்து நினைத்த இடத்துக்கெல்லாம் போயிருக்கிறாயே! ஆண்மானும், பெண்மானுமாக ஆண்யானையும், பெண்யானையுமாக வெல்லாம் உருவம் மாறி உலகத்தார் கண்களை ஏமாற்றி உல்லாசம் அனுபவித்திருக்கிறீர்களே; தெய்வங்களே! — அதுபோல நானும் பரிமளாவும் யானையாக மாறாவிட்டாலும், பூனையாகவாவது மாறி ஒருவரை யொருவர் சந்தித்து சந்தோஷமாயிருக்க சக்தி அளிக்கக் கூடாதா எங்களுக்கு?— அப்படி மாறினால் ஊரார் கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு, இருவரும் இன்பமாக இருப்போமே-ஒருநாளைக்காவது, ஒருமணி நேரமாவது, அந்த மாதிரி சக்தியைத் தரக் கூடாதா சண்டாளக் கடவுளே!—

"என்ன, இந்த ராமனையும் வரக் காணோம்? பரிமளா சீக்கிரம் விட்டால் தானே அவன் வருவான்! பாவம்- என்னைப் பற்றி அவள் என்னென்ன கேட்டுக் கொண்டிருக்கிறாளோ? காதலனுக்கு காதலியைப் பற்றிப் பிறர் சொல்ல
கேட்பதிலும், காதலிக்
காதலனைப் பற்றிப் பி
சொல்லக் கேட்பதிலுந்தா
தனி ஆனந்தமேயிருக்கிற
இந்த ராமன் செய்த புண்ய
கூட நான் செய்யவில்லையே
அவனாவது என் பரிமளாவி
அழகான முகத்தை தரிசித்
விட்டு வருவான்; அதுகூ
முடியவில்லையே என்னா
ராமன் வரட்டும்; அவன் கா
களைத் தொட்டுக் கும்பி
கிறேன். பரிமளா வீட்டை
மிதித்த கால்கள் என்ன
சாமான்யமா?"

இப்படியெல்லாம் தனியாக
பிதற்றிக் கொண்டே இங்
மங்கும் அலைந்து கொண்டிரு
தான் துக்காராம். பித்தம்
முற்றுவதற்குள்ளாக, நல்
வேளையாக ராமனும் வந்
சேர்ந்தான். "ராமா! ராமா!!"
என்று ஆவலோடு கத்தி
கொண்டு அவனிடம் ஓடினான்

"பார்த்தாயா பரிமளாவை
கண்டாயா என் கற்கண்டை?"

"கண்டேன் பரிமளாவை!"

"என்ன சொன்னாள்?"

"அய்யா சோறு தண்ண
யில்லாமல் கிடக்கிறாரு
வயிற்றுக்குள் ஆகாரம் இறங்
வதேயில்லை என்று சொ
னேன்"

"அதற்கு அவள் என்
சொன்னாள்"?

"ஜீரணத்துக்கு மருந்து சா
பிடச் சொன்னது!"

"ஆகா, எவ்வளவு கவ
என்னைப்பற்றி! — ஏ,ராம
நீ சொல்வது தானே; மருந்
வைத்தியனிடமில்லை உன்னிட
தான் இருக்கிறதென்று!"

"சொல்லாமல் இருப்பேன
என்னிடம் மருந்து இருக்கிற
என்று சொன்னேன். அப்
டின்னா அதையே அய்யா
குக் கொடுன்னு சொன்னது

---

'பரிமளாவின் காதலன்தான் துக்காராம்; அவன் துணை கிடைத்தால் புதையல் ரகசியத்தை சுலபத்தில் அறிந்து விடலாம்'— என்று தவறாக முடிவு செய்த வெள்ளியம்பலம் பட்டுக்கோட்டையிலிருந்து துக்காராமை மருங்கப் பள்ளத்திற்கு அழைத்து வருகிறார். பரிமளாவைத் தானே அடைய வேண்டும் என்ற துக்காராமின் மனக்கோட்டை அவரது முடிவுக்கு ஊக்கம் தருகிறது. தனது முயற்சியின் முதற் கட்டமாக, வேலைக்கார ராமனை துக்காராமின் தூதுவனைப் போல் பரிமளாவிடம் அனுப்புவதாக நாடகம் நடிக்கிறார், அம்பலம். ராமன் தூது போகிறான்.

இதற்கிடையில், புதுப்பட்டினத்தில் மர்மக் கிழவர் மாயாண்டியும், துரையும் தங்களது கதையை பரிமளாவின் முன் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதன் மூலம், புதையல் ரகசியத்தைச் சொல்லும் செப்பேடும், சிறுகல்லும் மாயாண்டிக் கிழவரிடம் சிக்கியிருப்பது தெரிகிறது. அவைகளைக் கிழவர் துரையிடம் ஒப்படைக்கும் நேரத்தில், கையில் கட்டாரியுடன் கொல்லையில் மறைந்திருந்த ஐயப்பன் பாய்கிறான். உயிரைக் காத்துக் கொள்ள கிழவரும் துரையும் அவனுடன் போரிடுகிறார்கள். அச்சமயம் வீட்டை விட்டு வெளியே ஓடுகிறாள் பரிமளா. உதவிக்கு ஓடிய அவள் எதிரில், தந்தை தாண்டவனும், போலீசாரும் வருகிறார்கள். செய்தி அறிந்த அவர்கள், ஓடி வந்து பார்க்கும் போது சண்டை நடந்த இடம் காலியாக இருக்கிறது. ஆனால், கொல்லைப்புறத்தில் வெட்டுண்ட கையொன்றைக் காணுகிறார்கள். அதேசமயம், அவர்கள் அறியாவண்ணம், அத்தானைத் தேடி ஓடுகிறாள் பரிமளா. அவளது ஓட்டத்தைத் தடுக்கிறது புதுப்பட்டிணத்தையும், ராஜாமடத்தையும் பிரிக்கும் ஆறு ஒன்று. வழி தெரியாது கரையில் நிற்கிறாள். அக்காரிருளில் இரு கரிய உருவங்கள் அவளை நோக்கி வருகின்றன...

"உன்னிடமா? அட பைத்தியம், என்னுடைய நோயைத் தீர்க்கக் கூடிய மருந்து பரிமளாவிடம்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்க வேண்டும்!"

"ஓகோ, அப்படியா? அந்தப் பெண்ணு டாக்டர் வேலைக்கு படிச்ச விஷயம் எனக்குத் தெரியாது. அடுத்த தடவை போகும் போது சொல்லி விடுகிறேன்."

"ராமா—பரிமளா எப்படி இருக்கிறாள்?"

"ரொம்ப அழகாக!"

"அதிருக்கட்டும், என்னைப் பற்றி என்ன சொன்னாள்? எங்கே, எப்போது சந்திக்கலாம் என்று சொன்னாள்?"

"உங்களை சந்திக்கணும்னு அந்தப் பெண்ணு துடிக்குது!"

"அப்படியா? ஆகா, என் ஆருயிரே! இன்பவல்லீ! துடிக்கிறாயா? நான் என்ன செய்வேன்? உன்னை எப்படி சந்திப்பேன்?"

"சந்திக்க வழி சொல்லியிருக்கு!"

"சொன்னாளா? வழி சொன்னாளா? ராமா, சீக்கிரம் சொல்லு அந்த வழியை!"

"ராத்திரி, ஊரு அடங்கின பிறகு, இரண்டு பேரும் சந்திக்கிறதாம்!"

"பலே! பலே! எந்த இடத்தில் ராமா?"

"இந்த ஊரிலே ஒரு சிவன் கோயில் இருக்கே; தெரியுமா?"

"ஆமாம்— வரும் போது பார்த்தேன்"

"அந்தக் கோயில் பக்கம் உங்களை வரச் சொன்னது, இன்னைக்கு ராத்திரிக்கு!"

"ஆகா! ஆகா! ராமா, இந்த சேதி கொண்டு வந்த உனக்கு நான் என்ன கொடுக்கப் போகிறேன்? கவலைப் படாதே; நான் எழுதிய காதல் புஸ்தகங்கள் அச்சானதும், உனக்கு ஒரு ஐம்பது புஸ்தகம் இனாமா அனுப்பி வைக்கிறேன்!"

"ஆமாம்; அனுப்புங்க. தலையணை இல்லாம ரொம்ப கஷ்டமாயிருக்கு எனக்கும்!"

"அப்படின்னா ராமா, இன்னைக்கு ராத்திரி ஊர் அடங்கினவுடனே சிவன் கோயில் பக்கம் போனா—அங்கே என்னுடைய காதலி வருவாள்!"

"ஆமாம்!"

"காதல் வாழ்க!—காதலர் வாழ்க!!"

★

இரவு எப்போது வரும், எப்போது வரும் என்று ஏங்கிக் கொண்டிருந்தான் துக்காராம். மாலையிலே ராமன் போட்டுத் தந்த பனை வெல்லக் காபி கூட அவனுக்கு இனிப்பைத் தரவில்லை. இரவு அருமையான விரால் மீனும், வயல் நண்டும் போட்டு குழம்பு வைத்தான் ராமன். அதையெல்லாம் சுவைப்பதற்கு துக்காராம் தயாராக இல்லை. அவனுடைய இருதயம் 'படபட'வென்று அடித்துக் கொண்டிருந்தது. எத்தனையோ முறை நேரிலே கண்டிருந்தாலும், மனம் விட்டுப் பேசப் போகிற முதல் நாள் இதுதான் என்று எண்ணிய போது அவனுக்கு ஒரு இடத்தில் இருட்புக் கொடுக்கவில்லை. ஊர் அடங்கி விட்டதா இல்லையா—என்று மிக உன்னிப்பாக கவனித்தபடி யிருந்தான்.

சேரிச் சிறுவர்கள் தமுக்கு அடித்து விளையாடிக் கொண்டிருந்த சப்தம் அவன் காதைத் துளைத்தது. எங்கேயோ ஒரு மூலையில் சிலர் கூடிக்கொண்டு ரதி மன்மதன் லாவணி பாடிக் கொண்டு கூத்தடித்த ஒலியும் அவனுக்குக் கர்ண கடூரமாக இருந்தது.

சிறிது சிறிதாக அந்த ஒலிகள் குறைந்து, ஊரிலே அமைதி நிலவ ஆரம்பித்தது. துக்காராம், சிவன் கோயிலை நோக்கிப் புறப்பட்டான், தன் காதலியைக் காண்பதற்காக!

"நாம் போன பிறகுதான் வருவாளோ? அல்லது நமக்கு முன்பு காத்துக் கொண்டிருக்கிறாளோ—அய்யோ! அப்படிக் காத்துக் கொண்டிருந்தால் அவள் காலெல்லாம் வலியெடுத்திருக்குமே; நாம் போனதும் முதல் வேலை, அவள் காலை அமுக்கி வலியைத் தீர்ப்பதுதான்—

"ஆகாகா-அவளைப் பார்த்ததும் என்ன பேசுவது? அவள் தான் என்ன பேசுவாள்?"—

இவ்வாறு சிந்தனை செய்தபடி அவன் கோயில் பக்கம் வந்து சேர்ந்தான். அவன் எதிர் பார்த்தபடி அங்கே பரிமளாவைக் காணவில்லை. நல்ல இருட்டு! கண்களை அகலத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். யாருமில்லை மெதுவாகக் கனைத்தான். "பரிமளா" என்று மெல்லிய குரலில் கூப்பிட்டுப் பார்த்தான் - பதில் இல்லை. மரங்களின் சலசலப்பும் - தவளையின் கத்தலும் - பூச்சிகளின் இரைச்சலும் - ஒரு பயங்கரமான சூழ்நிலையை அவனுக்கு நினைவு படுத்தின. மீண்டும் ஒருமுறை "பரிமளா" என்று கூப்பிட்டான். பதில் இல்லை. ஆனால், யாரோ கனைத்தது போல் தெரிந்தது - அவள் தான் என்று ஆவலோடு எதிர் பார்த்தான். யாரும் வரவில்லை-மறுபடியும், மெதுவாக— "பரிமளா!" என்று அழைத்தான், கலகலவென்று யாரோ சிரித்தார்கள். அந்தச் சிரிப்பிலே குளிர்ச்சி இல்லை. கொடுமை நிறைந்திருந்தது. மிகப் பயங்கரமான சிரிப்பு-துக்காராமுக்குத் தூக்கி வாரிப் போட்டது - இருதயத்தைக் கைகளால் அமுத்திக் கொண்டு அசைவற்று மரம் போல் நின்றான்.

"அகப்பட்டுக் கொண்டாயா?" என்று ஒரு கரகரப்பான குரல் கிளம்பியது.

"யார்? யார் அது?" என்று அழுதபடி அலறினான் பரிதாபத்திற்குரிய துக்காராம்.

"யாரா? நான் தான் பூதம்!"

"பூதமா? அய்யோ, பூதமா?" கை கால்கள் தட்டிவிட்ட வீணைத் தந்திகள் போல் அதிர்ந்தன அவனுக்கு.

"பூதம் தான்—புதையலைக் காக்கும் பூதம் நான்தான்!"

"பூதம் - பூதம்" என்று கத்திக் கொண்டே துக்காராம் ஓடினான்.

"ஓடாதே - நில்! பூதத்தின் உத்திரவை மீறினால் உன்னைப் பொடி செய்து சாப்பிட்டு விடுவேன்" என்று அதட்டியது அந்தக் குரல்.

துக்காராம் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான் - உடலெங்கும் வியர்வை கொட்டிற்று - ஏதேதோ உளறினான், அவனையறியாமல்!

[வளரும்]

## ★ மகாபாரதம் - [தொடர் சித்திரம்] - 12 ★





# அந்த ரகசியம் !

ரஷ்யாவிலே எங்கள் நேருவுக்கு ராஜோபசாரம் நடக்கிறது என்கிருர்கள்!

‘கும்பமேளாவுக்குக்கூட அவ்வளவு கூட்டம் கூடவில்லை மோதிலால் செல்வனைப் பார்க்க மோதிக்கொண்டு வருகிறது, பாரீர், மக்கள் வெள்ளம்’—என்று மார் தட்டிப் பேசுகிருர்கள்!

இந்த ரஷ்ய விஜய ரகசியம் பற்றியும், மக்கள் அவரைப் புகையெனச் சூழ்ந்துகொள்ளும் புதுமை பற்றியும் ‘கரண்ட்’ பத்திரிகை ஒரு சுவையான தகவலைத் தந்திருக்கிறது!

“ரஷ்ய மக்கள் உலக மக்கள் சமுதாயத்திலிருந்து பிரிந்து வாழ்கிருர்கள். எனவேதான், எப்போதாவது அங்கு வந்து போகும் அயல்நாட்டுக்காரர்கள் உற்சாகத்துக்குரிய பொருளாக மாறி, ரஷ்யர்களின் மனதை அவ்வளவாகக் கவர்ந்து விடுகிருர்கள்...

“ரஷ்யாவிலே நடந்த ஒரு அகில உலக சைக்கிள் பந்தயத்திலே இந்தியாவின் சார்பாகக் கலந்துகொண்டவர்கள் வெற்றி கண்டவருக்குப் பின்னுல் **மூன்று மணி நேரம் கழித்து** வந்து சேர்ந்தார்கள். ஆனுல் அவருக்கும் கை தட்டி, கரகோஷம் செய்ய ஒரு கூட்டம் காத்திருந்தது. இதைவிட ஆச்சரியம் என்னவென்ருல், தாமதித்து வந்த அந்த இந்தியர்களிடமிருந்து ஆயிரக் கணக்கானவர்கள் ‘ஆட்டோகிராப்’கூட கேட்டார்களாம்!”

—இப்படி எழுதுகிருர் கரண்ட் ஆசிரியர் **காரகா.** நேருவின் ரஷ்ய பயணத்தைக் குறைவு சொல்வதற்காக அவர் இந்த உதாரணத்தைக் காட்டவில்லை.

கார்த்திகைப் பிறை பார்ப்பதைப் போல் அவர்கள் வெளிநாட்டுக்காரர்களைப் பார்க்கிருர்கள். ஆமை வேகத்தில் வந்த சைக்கிள்காரர்களுக்கே கைலாகு கொடுக்க குழுமியிருக்கும் பழக்கம் கொண்டவர்கள், ஒரு நாட்டின் பிரதமருக்காக கூடிக் கலைவதில் வியப்பென்ன இருக்கிறது?

—இதுதான் ‘கரண்ட்’ எழுப்பும் கேள்வி!

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

## வியாபார வனிதை....

பூர்த்தி செய்யவே, பட்டிணத்திலிருந்து அந்தப் பட்டிக்காட்டிற்குச் சென்றிருந்தேன். அத்தைக்கு வேறு யாரும் துணை இல்லை. அவளின் நிலபுலங்களுக்கு நான்தான் வாரிசு. ஆகவே அத்தை பேச்சை தட்டமுடியாமல் இரண்டொரு நாள் தங்க விரும்பி அங்கு சென்றேன். கடற்கரையிலும், காட்சிக்கொட்டகையிலும் காலத்தைக் கழித்த எனக்கு கிராமச்சூழ்நிலைபிடிக்காமலிருந்ததில் ஆச்சரியமொன்றில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு நாட்களை விரட்டிக்கொண்டிருந்தேன். அங்குதான் சொர்ணத்தை நான் சந்தித்தது. அத்தைக்குத் துணையாக வீட்டு வேலைகள் செய்பவள் சொர்ணம். உழைத்து உழைத்து தழைத்திருந்தது அவளின் தேகம். பருவத்தின் பூரிப்பு அவளின் அங்கமெல்லாம் வண்ணக் கோலம் இட்டிருந்தது. அவளின் மருண்ட மான் விழிகள் சுருண்டு சோம்பிப்போயிருந்த என் இதயத்திற்கு உற்சாகத்தை அளித்தது. மின்வெட்டும்பேச்சும், புன்னகை வழியும் அவள் முகமும் என்னைக் கவர்ந்தது. வலியச் சென்று அவளுடன் பேசுவேன்; முகம் சிவக்க அவள் ஓடி ஒளிந்துகொள்வாள். அத்தையுடன் பேசுவது போல பாவித்து அவளுடன் பேசுவேன்; அவள்கன்னங்கள் குழிவிழச் சிரிப்பாள். நாளடைவில் நாணம் மறைந்து என்னுடன் சகஜமாகப் பேச ஆரம்பித்தது அந்த அல்லி மலர். வீட்டு வேலைக்காரியுடன் பேசுவதை அத்தையும் தவருக நினைக்கவில்லை. அதைத் தடுக்கவும் இல்லை. தடுப்பதற்கு ஆள் இல்லை என்ருல் துடுக்குத்தனம் வளருவது இயற்கைதானே, அணை போட்டுத் தடுக்கா வெள்ளம் நாற்புறமும் சிதறி ஓடுவதைப் போல! கேலி செய்வேன்—அவள் கை வளை ஒலி எழுப்பும்! கிண்டல் செய்வேன்—மருண்ட விழி கணைகளை என் மேல் தொடுப்பாள்! சிரிப்பேன் — சிரிப்பாள்! பெருமூச்சு விடுவேன் — புரியாமல் விழிப்பாள்! நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன......நான் பட்டணத்திற்குப் போவதையும் ஒத்திப் போட்டுக் கொண்டிருந்தேன்; என் உளளத்தில் மிருக இச்சையும் வளர்ந்து கொண்டிருந்தது.

அன்றிரவு! அத்தை கதாகாலட்சேபம் கேட்கப் போயிருந்தார்கள். நான் நிலா முற்றத்தில் யோசித்த வண்ணம் உலாவிக் கொண்டிருந்தேன். என் நெஞ்சில் சொர்ணம் சதிராடிக் கொண்டிருந்தாள். காலடியோசைகேட்டுத் திரும்பினேன். சொர்ணம் நின்று கொண்டிருந்தாள்.

“என்ன, சொர்ணம்?”

‘அப்பாவுக்குத் தலைவலி! கொஞ்சம் தைலம்”

‘தலைவலிக்குத் தைலம்-என் மனவலிக்குமருந்துஅளிப்பாளா?’-என் எண்ணம் இப்படிச் சுழன்றது.

“அத்தை இல்லை...வந்து விடுவார்கள்...”

“சரி; நான் போகிறேன்...”

“இரு சொர்ணம்! என்ன அவசரம்?...”

அவள் தயங்கி நின்ருள்.

“சொர்ணம்! அதோ பார்த்தாயா சந்திரன் ஓடுகிருன். தாரகைப் பெண்கள் அவனைத் துரத்துகிருர்கள்”

‘களுக்’ கென்று அவள் சிரித்தாள்.

“சிரிப்பு ஏன்—சொர்ணம்?”

‘இல்லை;பெண்களைத்தான் ஆண்கள் துரத்துகிருர்கள் என்று கேள்விப்பட்டிருக்கறேன்;ஆணைத்துரத்தும்பெண்களை கண்டதும் இல்லை: கேட்டதும் இல்லை-சரி சரி நேரமாகிவிட்டது.நான போகிறேன்.”

எனப் புறப்பட்டாள் அவள். அவளது பின்னலை இழுத்து நிறுத்தினேன். கனல் கக்கிறது அவளின் கண்கள். என் உதடுகள் அவளின் கன்னங்களில் பதிந்தன. அவள் திமிறினுள். என் இரு கைகளும் அவளைச் சிறைபிடித்தன. சந்திரன் கார்மேகத்து வீட்டில் ஓடி ஒளிந்து கொண்டான்.

மறுநாள் சொர்ணம் வரவே இல்லை. என் நெஞ்சம் வேதனையால் எரிந்தது. மறுநாள் நான் பட்டிணத்திற்குப் புறப்பட்டு விட்டேன்...மலரை முகர்ந்தபின் வண்டுக்கு அங்கென்ன வேலை...?

★

### சொர்ணம்

ஆம்! அவர் போய்விட்டார். ‘கிராமத்துக் குயிலா’கப் பாடித் திரிந்த என் நெஞ்சிலே வேதனையைச் சுமத்தி — விழிகளிலே நீரை நிரப்பி—‘நீ யாரோ; நான் யாரோ?’ என்ற நட்புக் காவியத்தின் இறுதி அத்தியாயத்தையும்பொரித்துவிட்டுப் பறந்துவிட்டார். நினைவு தெரிந்த நாள் முதல் இயந்திரமாக இருந்தேன். நடுவிலே புகுந்தார். அவர் அள்ளித் தந்த ‘மானசீக இன்பம்’ எனக்கு புது வாழ்வு தருவதாகப் பூரித்தேன். மரித்துப் போனது என் எண்ணங்கள்! மலரைக்கசக்கி புழுதியிலேஎறிந்து விட்டு ஓடிவிட்டார். மலரின் வேதனை வண்டுக்கு எங்கே தெரிகிறது? தேனை உண்டபின் வண்டு தன் வேலை முடிந்துவிட்டதென்று ஓடி விடுகிறது. ஆனுல், அதனுல் பரிசுகிடைப்பது மலருக்குதானே; இரக்கமற்ற இயற்கையின கொடுமை மலருக்கு தானே! ‘கொடுமைதானே; காலத்தால் மாற்றப்பட்டுவிடும் அத்துன்பம்’ என்று சமாதானத்தைத் தேட முயன்றது என் மனம். ஆனுல் காலத்தால் மாற்றப்படவோ, மறைக்கப்படவோ கூடிய நிலையில் என்னை வைக்கவில்லை,எங்கள் விந்தைத் தொடர்பும் — அது விளைத்த மோசமும்-இன்று வாரித் தரும் துன்பமும்! வண்டு பறந்துவிட்டது; என் வயிற்றிலும் கரு வளர ஆரம்பித்தது. படித்தவராயிற்றே; பக்குவமாக நடந்து கொள்வாரென்றுதான் அவருடன் சகஜமாக பேச ஆரம்பித்தேன். மந்தி குணம் படைத்தவர் என்று அறிந்திருந்தால் அப்பக்கமே நான் திரும்பி இருக்கமாட்டேன். இனிக்க இனிக்க பேசி, என்னைத் துன்பத் தணலில் தள்ளி விட்டார். நாட்கள் தேயத் தேய, என் வயிற்றிலேயும் வேதனை வளர ஆரம்பித்தது. கழுத்திலே தாலி இல்லை...வயிற்றிலே கரு! இதை யாரிடம் சொல்ல முடியும்?தந்தை என் சூதை அறிந்தால் பனங்குலையை வெட்டுவதைப் போல என் தலையைச் சீவி விடுவார். ஆகவே ஒருநாள் இரவு, வளர்த்த தந்தையையும் பிறந்த மண்ணையும் விட்டுப் புறப்பட்டேன்.

என் நெஞ்சிலே தீ மூட்டியவரை பட்டிணத்திலே தேடிப் பிடித்துவிடலாமென்று வந்தேன். பரந்து விரிந்துள்ள அந்நகரில் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்னுல். போக்கிடம் எதுவும் இல்லை எனக்கு...புகலிடமும் இல்லை. பிச்சை எடுக்க ஆரம்பித்தேன். ‘என் இச்சையைதீர்க்கவா’ வென்றுதான் பலரும் அழைத்தார்கள்.

பசியால் சுருண்டு மரத்தடியிலே படுத்திருந்தேன். முரட்டுக் கையொன்று என் மேல்பட்டது, கண் விழித்துப் பார்த்தேன். ‘கண்ணுட்டி-கண்ணுட்டி’ என்று உளறிக் கொண்டே என்னைக் கட்டி அணைத்தான் ஒருவன்.

அவன் தான் முனியன். ரிக்ஷா இழுப்பவன். மறுநாள் முதற்கொண்டு நானும், அவனும் புருஷனும் மனைவியும் போல வாழ ஆரம்பித்தோம். காலம் ஓட ஓட, காசு கொடுப்பவர்களுக்கு கட்டிய மனைவியாக நடக்க வேண்டிய நிலை வந்துவிட்டது எனக்கு. என் வாழ்வு நிலை குலைந்ததை எண்ணி எண்ணி ஏங்குவேன்; கண்ணீர் சிந்துவேன், என்னை இக்கதிக்கு ஆளாக்கியவரை பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்று என் உள்ளம் துடிக்கும்.கண்ணில்படுவாராஎன்று துருவித் துருவிப் பார்ப்பேன். ஆனுல் இன்று தான் நீதிமன்றத்திலே பார்க்க முடிந்தது. என் ஆத்திரம் தீரப் பேச துடித்தது என் இதயம், என் கற்பைச் சூறைபாடியவர் நீதிபதி. கற்பை பறிகொடுத்தவள் குற்றவாளிக் கூண்டில்! யார் குற்றவாளி? வாழ்வைப் பறிகொடுத்த நானு? என் வாழ்வை பறித்துச் சென்றவரா? குற்றவாளி யார்? நீங்களே கூறுங்கள். நீதி வழங்க வேண்டிய நான் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறேன்...குற்றவாளிக் கூண்டிலே நிற்க வேண்டியவர் நீதி வழங்க வந்திருக்கிருர்!வேடிக்கை விசித்திரம்...” ஃ

# பிறை வானம்

..பிள்ளைகள் பகுதி...



## ★ துரோகி ★

[ செல்வம் ]

கோபால் பள்ளியிலே முதல்வன். கஷ்டப்பட்டு பல னடைவான். அவனது உயிர் நண்பன் பாலனுக்கு விளை யாட்டு என்ருல் கரும்பு; படிப்பு என்ருல் வேம்பு. பாலனின் தந்தை கோபாலைப் புகழ்ந்து, பாலனை அடிக்கடி திட்டுவார். மனம் நொந்த அவன், கோபா லனின் மேல் பொருமை பூண் டான். படிப்பில் பொருமை வேண்டும்; உண்மை. ஆனுல், அவன் எண்ணம், நன்ருகப் படித்து நல்ல மார்க்கு வாங்க வேண்டும் என்பதில் இல்லை. கோபாலனுக்கு எப்படியாவது இழிவு ஏற்படுத்த வேண்டும் என்பதிலேயேஇருந்தது.இதை அறிய கோபால் வழக்கம் போல் நண்பனிடம் பாசம் வைத்திருந்தான்.

ஆனுல் பாலனே, சிரித்த முகத்தோடு—ஆனுல் சூதுமதி யோடு-கோபாலனைக் கவிழ்க்க, அவனுக்கிருந்த நல்ல பெயரை அழிக்க 'சமயமெங்கே?' என்று காத்துக் கொண்டிருந்தான்; தேடிக் கொண்டிருந்தான். பொருமையல்லவா, பயங்கரப் நோயாயிற்றே அது! அதனுல் தாக்கப்பட்ட பாலன் நண்ப னுக்கே 'துரோகி' ஆனதில் வியப்பென்ன?

✶

ஆண்டுத் தேர்வுக்கு எல்லோ ரும் நன்ருகப் படித்தனர். பரிட்சையும் வந்தது. அவர வர்கள் இடத்தில் அமர்ந்தனர். கோபாலனும், பாலனும் பரிட்சை எழுதுவதற்கு முன் பாடங்களைப் பற்றிப் பேசினர். ஆசிரியர் பேப்பர் கொடுத்தார். எல்லோரும் எழுதினர். திடீ ரென்று பாலன் எழுந்து,"சார்! கோபாலன் புத்தகத்தை அடி யில் வைத்து அதைப் பார்த்து எழுதுகிருன் சார்!" என்று உரக்கக் கூவினுன். கோபாலன் உண்மையிலேயே புத்தகம் வைத்திருக்கவில்லை. ஆனுல் கீழே பார்த்தான். என்ன ஆச் சரியம்! புத்தகம் இருந்தது. எவ்வளவோ எடுத்துக் கூறியும் ஆசிரியர் நம்பவில்லை. ஆகை யல் அவனுக்கு இருந்த நல்ல பெயர் அடியோடு போய்விட் டது. பாவம்!

கோபாலன் வருந்தினுன். 'பாலனு இப்படி அபாய நண் பனுகி விட்டான்' என்று கலங் கினுன். ஆனுல் பாலனே சிரித் தான்; எடுத்த முயற்சியில் வெற்றி கிடைத்து விட்டதே என்று பூரித்தான். அந்த சிரிப் பும் பூரிப்பும் 'நான் செய்தது ஒரு இழிச் செயல்' என்ற எண் ணத்தையே அவன் மனதில் புகுத்தவில்லை பின், பொருமை புகுந்த நெஞ்சில் நீதிக்கு இடமேது? நேர்மைக்கு வாய்ப் பேது?

★

கோபாலனின் மற்றைய நண் பர்களுக்கு மட்டும் தெரியும், அவன் நல்லவன் என்று. அதை வெளிப்படுத்தவும், பாலனின் சூழ்ச்சியை அம்பலப்படுத்தவும் கருதினர். ஆகவே அவர்கள் எல்லோரும் ஒன்று கூடினர். அதுபற்றி யோசித்தனர். வழி யொன்று தேடினர். நீண்ட நேர யோசனைக்குப் பிறகு முடி வொன்றும் செய்தனர். அந்த முடிவுதான் என்ன?

✱

அன்றிரவு பாலனுக்கு அந்த நண்பர்களில் ஒருவன் வீட்டில் விருந்து வைத்த னர். அடிக்கடி கோபாலனைப் பற்றி இகழ்ந்துபேசினர். பூரித் தான் பாலன். ஆசிரியரும வந் திருந்தார். எல்லோரும் ஒரே அறையில் படுத்துறங்கினர். பாலனைத் தவிர மற்றைய எல் லோரும், ஆசிரியரும் தூங்கு வதுபோல பாசாங்கு செய்த னர். நடு இரவு! பாலன் ஏதேதோ புலம்பினுன். பாவம்; மறுநாள் நடக்கப்போவது அவனுக்கென்ன தெரியு ? மறு நாள பள்ளியில் ஆசிரியர் கோபாலனை அழைத்து, மாண வர்கள் முன்னிலையில தான் அவசரமாக செய்த காரியத்துக் காக அவனிடம் மன்னிப்பு கேட்டார். கோபாலன் ஒன்றும் புரியாமல்விழித்தான். "பாலன் தான் புத்தகத்தை வைத்தான். அதற்குத் தக்க ஆதாரம் பால னின் வாயிலிருந்தே கிடைத் துள்ளது. என் அவசர புத்தியை கோபாலனின் நண் பர்கள் திருத்தினுர்கள்" என்ருர்.

★

அந்த ஆதாரம் உங்களுக்கே புரிந்திருக்குமே! ஆம்! அன் றிரவு பாலன் புலம்பினுனே, அந்த வார்த்தைகள்தான் அவனைக் காட்டிக்கொடுத்தன. எந்த வார்த்தைகள் என்று சொல்லவில்லையே!"கோபாலா! என் சூழ்ச்சி வெற்றியடைந்து விட்டது பார்த்தாயா? பள்ளி யில் முதல்வன் என்று தலை நிமிர்ந்து நடந்தாயே! பார், உன் புத்தகத்தாலேயே உன்னைத் 'திருடனு'க ஆக்கி னேன்! இந்த பாலனிடமா உன் மேதைத் தன்மை பலிக் கும்? இப்போது உன் நண்பர் கள் எல்லாம் என் காலடியில் தம்பி! பாரேன், விருந்தையும், வேடிக்கையையும்!" என்று தான் அவன் புலம்பினுன்.

✶

## ★ வெற்றி வீரன் ★

[துன்பம் இருக்கிறதே, அதற்குக் கொஞ்சமும் இரக்கமே கிடையாது. பச்சைப் பாலகனுயிற்றே - பள்ளி செல்லும்பருவ மாயிற்றே - தாங்க முடியாதே அவனுல் - என்றெல்லாம் யோசிக் காது அது. வாட்டும்; வதைக்கும்; அதைக் கண்டு சிரிக்கும்! அதன் வேகத்தில் சிக்கிய தம்பிகள் துடிப்பார்கள்; துவண்டு போவார்கள்; அழுது அழுது மாய்வார்கள. ஆனுல், அதை எதிர்த்து நின்று போர் செய்யவும் துணிந்தார்கள் சிலர். அவர்கள் அனைவரும் வெற்றியேதான் பெற்ருர்கள். அத்தகைய 'வெற்றி வீரர்'களில் ஒருவனைக் கீழே காணுங்கள்.]

அவன் செல்வத்தில் ஏழை; அதைப் போல் படிப்பிலும் ஏழை. "இவன் ஏன் பள்ளிக்கு வருகிருன்? எங்காவது ரொட்டி விற் கப் போவததானே!" — "அவன் தலை அமைப்பு விேநாத மானது; மூளை அமைப்பிலும் கோளாறு இருக்கிறது; ஆகவே அவனுக்கு படிப்பு வராது; வரவே வராது."-இப்படியெல்லாம் ஆசிரியர்கள் திட்டினுர்கள்; கிண்டல் செய்தார்கள். அவனுல் தாங்க முடியவில்லை. பள்ளிக்கூடத்தை விட்டே ஓடினுன். ரொட்டி விற்க அல்ல; 'பேப்பர்' விற்க. ரயில் வண்டியின் ஒரு முனையிலிருந்து இன்னெரு முனைக்கு ஓடுவான், 'பேப்பர், பேப்பர்' என்று கூவிக்கொண்டு. பாவம், அப்படிப் பேப்பர் விற்றவன், பின்னுல் பிரபல பேப்பர் வியாபாரியாக மாறிவிட் டான் என்ரு நினைக்கிறீர்கள்? இல்லை. இன்று இரவைப் பகலாக்க - இயந்திரங்களை ஓட்ட — பயன் படுத்துகிருேமே, அந்த மின்சாரத்தைக் கண்டு பிடித்தவன்தான் அவன்! இப்போது சொல்லுங்கள்; யார் அவன்?

[illegible]

## தாயன்பு தந்த மேதை!

அன்று ஞாயிற்றுக் கிழ மை. அதி காலை நேரம். அந்த நேரத்தில், நீண்ட சாலை ஒன்றில் நடந்துகொண் டிருக்கிருன் ஒரு தம்பி.

அவன் நடையிலே வேகம் இல்லை; ஆனுல் சோகம் கப் பியிருந்தது, அவன் முகத் தில். ஆமாம்; அவன் காலை யில் எழுந்து இன்னும் எது வும் சாப்பிடவில்லை; சாப்பி டவோ வழிஇல்லை; கையிலே காசு இல்லை. இருந்தாலும் களைப்பால் தள்ளாட—கவ லையால் தடுமாற—அவன் நடந்து கொண்டிருக்கிருன். ஒரு மைல் அல்ல; இரு மைல் அல்ல; இன்னும் இன்னும் நடந்து கொண்டேயிருக்கி ருன். அவன் கால்கள்தான் அடியெடுத்துவைக்கின்றன. ஆனுல், கலங்கியிருக்கும் கண் முன்னே...

அதோ, அவன் அப்பா— சிறிய சட்டிப் பானைக் கடைக்காரர்—கடை nொ டித்துப் போய் விட்டது— சிறகில்லாத பறவையைப் போல் சோர்ந்து கிடக்கிருர்!

ஆசை அம்மா...வீடு ஒன் றில் கூலி வேலை செய்கிருள். தாயும் தந்தையும் இந்நிலை யில் வாழும்போது ஒரே அன்பு மகன் சும்மாவா இருப்பான்? அவன் தன் வயதை மறந்தான்; குடும் பத்தைக் காக்கும் பெரிய பொறுப்பை தலையில் சுமந்து கொண்டான். வேலை தேடி ஓடினுன். ஒரு ஜவுளிக்கடை அவனை 'வா' என்று அழைத் தது!

ஆனுல்... அந்தக் கடை யின் முதலாளி மனித உரு வில் இருக்கும் மிருகம்! அந் தப் பாலகனை பயில்வான் என்று நினைத்து விட்டாரோ என்னவோ, இயந்திரம் கூட செய்ய முடியாத வேலைகளை யெல்லாம் அவன் மேல் சுமத்தினுர். கொஞ்சம் தவ றினுலும் திட்டினுர்; அடித் தார்; உதைத்தார். தாங்க முடியவில்லை பையனுல்! ஆகவேதான் கடையிலிருந்து வெளியேறினுன். பதினேந்து மைல் தூரத்திலிருந்த தன் கிராமத்தை நோக்கி— அம் மாவைக் காண—கால்நடை யாகவே புறப்பட்டான்.

★

கிராமத்தை வந்தடைந் தான். அம்மாவிடம் நிலைமை யைச் சொன்னுன். அழு தான். புலம்பினுன். அம்மா வும் கண்ணீர் விட்டாள். ஆனுலும் தன் மகனை உல கைக் கண்டு அஞ்சும் கோ ழையாக மாற்ற விரும்ப வில்லை. தாயன்பு தன் கட மையைச் செய்தது: ஆறுதல் அளித்தது: ஆக்கம் தந்தது: சோர்ந்து விட்ட மகனுக்கு ஊக்கத்தை ஊட்டியது: பலனையும் கண்டது: ஒரு நாள், உலகத்து மேதை களில் ஒருவனுகவும் ஆக்கிக் காட்டியது! அந்த மேதை யாரென அறிய ஆவல் தோன்றுகிறதல்லவா? அவன்தான் உலகை எழுத் தால் அளந்து காட்டிய எச். ஜி. வேல்ஸ்.

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### பொதுக் கூட்டங்கள்

**சேலூர்** (வ. ஆ. மாவட்டம்)

25–6–55 சனி மாலை 6 மணிக்கு, மணப்பாரை குமாரவேல் அரங்கில் தி. மு. க ழ க ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா நடைபெறும். தோழர் முல்லை-சத்தி தலைமையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் க. அறிவழகன், போளூர்சுப்ரமணியம் ஆகியோர் பேசுவர். இரவு 10 மணிக்கு " தூக்கு மேடை " நாடகம் நடைபெறும்.

**சென்னை** (திருவெற்றியூர்)

25–6–55 சனி மாலை 6 மணிக்கு, திருவெற்றியூர் சன்னதித் தெருவில் தோழர் எஸ். மாசிலாமணி அவர்கள் தலைமையில், தோழர்கள் எஸ். எஸ். இராஜேந்திரன், டி. கே. சீனிவாசன்-ஆகியோர் பேசுவர்.

**பெரியகுளம்**

26–6–55ஞாயிறு மாலை6மணிக்கு, பெரியார் திடலில் தோழர்கள் கி. மனோகரன், மதுரை முத்து-ஆகியோர் பேசுவார்கள்.

**குடியேற்றம்**

27–6–55திங்கள் மாலை 6மணிக்கு, குடியேற்றம் ஆற்றில் தோழர்கள் சிற்றுளி சுப்ரமணியம், புலவர் ஆ. மணி எழிலன்-ஆகியோர் பேசுவர்.

### வேலூரில்
### பொதுச் செயலாளருக்கு வரவேற்பு

**26--6—55**

ஞாயிறு மாலை 6-மணிக்கு (கோட்டைவெளி மைதானத்தில்)
தலைவர் : முல்லை-சத்தி
பாராட்டுவோர் :
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்

(அன்று காலை 10-மணிக்கு வேலூர் நகர சபையில் பொதுச் செயலாளருக்கு வரவேற்பு அளிக்கப்படும்)

### புதுவையில் வட்டக்குழு அமைப்பு

26–5–55 காலை 9 மணிக்கு, புதுவை தி. மு. கழகத்தில், தெ. ஆ மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள் முன்னிலையில், தி.மு.க. புதுவை வட்டக் குழு அமைக்கப் பெறும். அதுபோது, புதுவை அரசியல் தேர்தலில் தி. மு. க. நிலை பற்றி முடிவு செய்யப் படுவதோடு, மாநில மாநாட்டுநன்கொடைநிதிக்காக புதுவை வட்டத்தின் பங்குத் தொகையும் தெ. ஆ. மாவட்டச் செயலாளரிடம் அளிக்கப் படும். ஆதலால், புதுவை வட்டத்திலுள்ள எல்லாக் கிளைகளின் செயலாளர்களும், புதுவைத் தி. மு. க செயற் குழுவினரும் அவசியம் கலந்து கொள்ளுமாறு புதுவை தி. மு. க, செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

### சொற்பயிற்சி

25–6–55சனி இரவு 8–30மணிக்கு சென்னை ஆயிரம் விளக்கு அறிவு வளர்ச்சி மன்றத்தில், தோழர் பொ. கோபாலன் அவர்கள் தலைமையில் " வள்ளுவரும் குறளும் " என்ற தலைப்பில் பலர் பேசுவர்.

## சக்கரவர்த்தி......

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

*சந்தேகத்திற்குரிய சீதையின் அம்சமாமே — பொருந்துமா? பூசுரர் தலைவரே! உமது புதிய ஆராய்ச்சி இந்நாட்டுப் பெண்கள் குலத்திற்குப் பொருந்துமா? உமது தரப்பிலே நின்று வாதாடிப் பார்க்கிறேன், துயரப்படும் பெண்கள் எல்லாம் சீதையின் அம்சமென்றால், இளமையையும் அழகையும் இரவு ராஜாக்களுக்கு அடமானம் வைத்து, விபச்சார வாழ்வு நடத்தி, வேதனை எரிமலைகளாக வீதியிலே நீர் பெருக்கி வீதியிலே அலைகின்றார்களே; அந்த வழுக்கி விழுந்த சகோதரிகள் கூட சீதையின் அம்சம்தானா? ஆச்சாரியாரே! உம்மையுமறியாமல் சீதையை அவமானப்படுத்துகிறீரே;*

*ஏன்? கல்கி, இதழிலே அவர்களுக்கு வாக்களித்தபடி, பக்கத்தை நிரப்புவதற்காக எதையாவது எழுதி வைப்போம் என்ற அவசியத்திலே எழுதுகிறீரா? அல்லது, உமது எழுத்துக்களிலே முன்னுக்குப் பின் ஏற்படும் முரண்பாடுகள் — முதுமைக் கோளாறால் ஏற்பட்டவை என்று மக்கள் மன்னித்து விடுவார்கள் என்ற தைரியத்தில் எழுதுகிறீரா? பரிதாபம்! மிகப் பரிதாபம்! காகுத்தனின் மனைவி சீதையும்—கடைத்தெரு முனையிலே நின்று கண் காட்டி வயிறு வளர்க்கும் பாவையும் ஒரே அம்சம் என்று எழுதுவதற்கு உமக்கு அதிகம் துணிவுதான் இருக்க வேண்டும்!*

*மேலாடையைப் பற்றி கவலைப்படாத சீதையையும், மேன்மக்கள் குடிப் பிறந்த பூங்கொடிகளையும் ஒரே அம்சமென சித்தரிக்க உமக்கு மிகுந்த நெஞ்சழுத்தம்தான் இருக்க வேண்டும்!*

*எவ்வளவு மாண்பாடாக எழுதிக் கொண்டு வரும்— அந்தக் குப்பைகளை சந்தியில் வாரிப் போட்டுக் கொண்டு ஆடுவதற்கு அஷா பூசிய கிரிகிரார்கள் என்ற ... இருக்... நாயில் நீர் இந்நாட்டிலேயுள்ள பெண்கள் எல்லாம் சீதையின் அவதாரம் என்று மட்டுமா எழுதுவீர்; திரௌபதையின் அவதாரம் என்றுகூட எழுதுவீர்!*

[ தொடரும் ]

### மதுரை மாவட்ட கிளைக் கழகத் தோழர்களுக்கு

மாநில மாநாட்டு நிதி இம்மாதம் 26-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்று அறிக்கைகள் விட்டும், இரு முறை கடிதங்கள் எழுதியும், இது வரை கொடுக்காதிருக்கிற கிளைக் கழகங்கள்உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமென மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

### தில்லை. க அறிவழகன் சுற்றுப்பயணம்

ஜூன் 24 மணலூர்
,, 25 சேவூர் (ஆரணி)
,, 26 சிதம்பரம்






## மணிமகுடம்

சென்ற 19-ம் தேதியன்று சென்னை தியாகராயர் கல்லூரி கலாமண்டபத்தில் மு. க. வின் **'மணிமகுடம்'** நாடகம் ராஜேந்திரன் நாடக மன்றத்தினரால் அரங்கேற்றப்பட்டது. இலட்சிய நடிகர் ராஜேந்திரன் புதுமைப் பித்தனாகவும், நடிகமணி டி. வி. நாராயணசாமி பொன்னழகனாகவும், எம். என். கிருஷ்ணன் கருப்பு ரோஜாவாகவும், எம். என். ராஜம் அல்லியாகவும், இந்திரா கலாராணியாகவும் நடித்தார்கள். நாடகத்துக்கான பாடல்களை தோழர்கள் ஆத்மநாதன், முத்துக்கூத்தன் எழுதியிருந்தார்கள். முற்றிலும்புதுமையானஅமைப்புகளுடன் அரங்கேறிய 'மணிமகுடம்' கூடியிருந்த மக்கட்திரளை பெரிதும் கவர்ந்தது.

✶

## 'ஆசாத்' அறைகூவல்!

சினிமாகூடாது — சினிமா ஒழிந்தால்தான் நாடு வாழும்; கேடு ஒழியும்-என்று கூரை மீதேறி நின்று கோஷித்தார்கள் அல்லவா கோலோச்சும் குணாளர்கள், அவர்களுடைய மூக்கறுக்கும் விதத்திலே பட்சிராஜாவின் **'ஆசாத்'** வெற்றி முழக்கம் கொட்டி வருகிறது.

கடந்த பத்து வாரங்களில் மட்டும் அந்தப் படம் பத்து லட்சம் ரூபாய்கள் வசூலைக் குவித்திருக்கிறது. தமாஷா வரி மூலம் அரசாங்கத்திற்கு சுமார் எட்டு லட்சத்து, தொண்ணூறாயிரம் ரூபாய்கள் கஜானாவிற்குப் போயிருக்கின்றன.

எந்தவித ஐந்தாண்டுத் திட்டங்களும் கிடையாது! ஆலோசனைகளைக் கூற வெளிநாட்டிலிருந்து நிபுணர்கள் கோஷ்டி இங்கு வந்து கூடாரம் போடவில்லை. புதையல் எடுத்ததைப் போல ஒரு படம் பத்தே வாரங்களில் பல லட்சங்களை அரசாங்கத்திற்குப் பாதகாணிக்கை செலுத்தியிருக்கிறது.

இப்படி லட்சக்கணக்கில் கொண்டல்போல கொடை கொடுக்கும் வள்ளலாகத் திகழும் சினிமாவைத்தான் இந்த நாட்டு அரசாங்கத்தார் ஒழிய வேண்டுமென்று சாபம் விடுகிறார்கள்!

•

'ஆசாத்' எச்சரிக்கிறது, அரசாங்கத்தைப் பார்த்து— "பொன்முட்டையிடும் வாத்து-வெள்ளி வீதியிலே பவனிவரும் காவியங்கள்! அதைக்கொன்று விடாதீர்கள்! திரையுலகம் திரும்பிப் பார்க்காத காரணத்தால் சினிமா ஒழித்து-சிலம்பெடுக்கும் வீரர்கள் கர்ஜனை புரியட்டும்—அதிலே அர்த்தமிருக்கிறது. ஆதிக்கபுரி தகர்கிறதே என்ற ஏக்கம் காரணமாக ஆரியக் கோட்டையின் காவலர்கள் கூக்குரல் போடட்டும்—கவலையில்லை! ஆட்சி பீடம் ஏறிய சுப்ரமணியங்களே! சினிமா அரசாங்கத்தின் பொக்கிஷத்தை நிரப்பும் ஒருதொழில். அதைத் தொலைத்துத் தலை முழுக வேண்டுமென்று கனவிலும் கருதாதீர்கள்!"

✶

## நட்சத்திர டைரக்டர்கள்!

எம். ஜி. எம். கம்பெனியார் தயாரிக்கும் 'பௌனுனி ஜங்ஷன்' என்னும் படத்தின் டைரக்டர், அதிலே நடிக்கும் சில நட்சத்திரங்கள் சவால் விடுத்தமைக்காக ஒரே காட்சியில் ஒரு சில நிமிடங்கள் நடிக்கப் போகிறாராம்.

ஹாலிவுட்டின் பிரபல டைரக்டர் **ஆல்பிரட் ஹிச்காக்** தானெடுக்கும் ஒவ்வொரு படத்திலும் புதுப்புது முறைகளைக் கையாண்டு திரைப்பட உலகத்தையே திகைக்க வைப்பவர். அவர் டைரக்ட் செய்யும் எந்தப் படமானாலும் சரி, ஏதாவதொரு காட்சியில் தலைகாட்டாமலிருக்கமாட்டார். இந்த செய்தி தெரிந்த ரசிகர்கள் அவர் எங்கே வந்து போகிறார் என்று தேடுவதிலேயே தனி உற்சாகம் காண்கிறார்கள்.

தென்னாட்டுத் திரைப்பட இரட்டையர்கள் கிருஷ்ணன்-பஞ்சுவுக்குக்கூட இந்தக்குணம் உண்டு. **'இரத்தக் கண்ணீர்'** படத்தில், எம். ஆர். ராதா குஷ்டரோகி வேடத்தில் தெருவோரத்தில் சுற்றும்போது, இரட்டையர்கள் கையிலே சிகரெட்டுடன் தோன்றி மறைவதை ஊன்றிப் பார்ப்போர் கவனித்திருக்கலாம்.



## நில் நண்பா! எங்கே ஓடுகிறாய்?

*"கோவாவிலே கொடுங்கோல் ஆட்சி நடைபெறுகிறது!"*

*"ஆமாம்; கோல் முறிந்து விழும் காலம் நெருங்கிக் கொண்டு தான் இருக்கிறது!"*

*"அமைதியாகச் சட்டம் மீறுபவர்களுக்கு எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்படுகிறதாம்...... இரக்கமற்றவர்கள்! இருதயமில்லாதவர்கள்! இட்லரைவிடக் கொடியவர்கள்!..."*

*"பொறு தம்பி! கல்லக்குடி அறப்போராட்டத்திலே ஈடுபட்ட நண்பர்களுக்கு மூன்று ஆண்டுகளும், தூத்துக்குடி தோழர்களுக்கு ஏழு ஆண்டுகளும் தண்டனை வழங்கி தர்பார் நடத்தியதே — ஆச்சாரியார் ஆட்சி, அவர்களை விடவா இவர்கள் கொடியவர்கள்?"*

*"? ? ?..."*

★ ★ ★

*"அமைதியாக ஊர்வலம் போனால் அடித்து நொறுக்குகிறார்கள்—விழுந்து கடிக்கின்றன போர்ச்சுகீசிய நாய்கள்! அநியாயம்! அக்கிரமம்!!..."*

*"இதை அநியாயம் என்று சொல்லிவிட்டாயே — குடந்தை தெருக்களிலே குருதி மழை பொழிந்ததே அது என்ன நியாயம்? கபால ஓடுகள் தெறித்துப் போகிறவரையிலே மலபார் போலீசாரின் குண்டாந் தடிகள் வெறியாட்டம் ஆடினவே - அதை என்ன பெயரிட்டு அழைப்பது?*

*"? ? ?..."*

★ ★ ★

*"தொண்டர்களையெல்லாம் லாரியில் ஏற்றி திக்கு தெரியாத காடுகளில் விட்டுவிட்டு வந்துவிடுகிறார்களாம்! இது தான் நீதியா? நெறிமுறையா?"*

*"அடிவயிற்றில் அடித்துக்கொண்டு அழுகின்ற நண்பனே! ஆழ்ந்து யோசித்துப் பார்! பள்ளியிலே மறியல் செய்த பூரண கர்ப்பிணியை பொடிமணல் தகிக்கும் சவுக்கு மரக் காடுகளிலே தன்னந் தனியளாய்—துணையின்றி விட்டு வந்தீர்களே, உங்களிடமிருந்து கற்றுக்கொண்டதைத் தானே போர்ச்சுக்கீசியப் போலீசார் திருப்பிப் படிக்கிறார்கள்! இப்போது ஏன் உறுமுகிறாய்?"*

*"? ? ?..."*

★ ★ ★

*சாந்தமான முறையிலே மறியல் செய்யும் வீர ரமணிகளைக் காராக்கிரகத்தில் அடைத்து, மொட்டை அடிக்கிறார்கள்! கோணல் மாணலாக மயிரைக் கத்தரித்து கோணங்கி வேஷம் போட்டு துரத்தி விடுகிறார்கள்! அடுக்குமா இது? அதிகாரப் பித்துப் பிடித்த பைத்தியங்களே! உருப்படுவீர்களா நீங்கள்?"*

*"தம்பி! அலறாதே! அன்றொரு நாள் ஆசைத்தம்பிக்கு மொட்டையடித்து, பாராள வந்த நீங்கள் 'பார்பர் ஷாப்' வைத்தீர்களே—நீங்கள் மட்டும் உருப்படியாக வாழும் போது, அவர்கள் மட்டும் பொசுங்கிச் சாக வேண்டுமா? பதில் சொல், தோழா! ஏன் திகைக்கிறாய்?"*

*"? ? ?..."*

★ ★ ★

*"அய்யய்யோ! விடுதலை வீறு கொண்ட மக்களை மாக்களாக நினைத்து ஆப்பிரிக்காவிலிருந்து இராணுவத்தை அழைத்திருக்கிறீர்களே! வெள்ளை ஏகாதிபத்யத் தூதுவனும் வெலிங்டனை நல்லவனாக்கி விட்டீர்களே! ஜாலியன் வாலாபாக்கிலே குழந்தை மனத்துடன் கூடியிருந்த மக்களை குன்று போலக் கொன்று குவித்த டயர் தோற்றானே! அய்யகோ!"*

*"அழாதே, தோழா! தோற்றோடிய ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாகத் திரும்பிய போது, ஒதுங்கி நின்று கருங்கொடி காட்டிய காளைகள் மீது மிலிட்டரி போலீசை ஏவினீர்களே, அப்பொழுதே டயர் தோற்று விட்டானே! "பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரது தமிழ் படித்த கண்கள் இரத்தம் கக்கினவே- அன்றே வெலிங்டன் நல்லவனாகிவிட்டானே!"*

*"நில் நண்பா! எங்கே போகிறாய்? ஏன் ஓடுகிறாய்?"*

# 'எழுத்தாணி'

அ. அ. பரமசிவன்;
போடிநாயக்கனூர்.

(?) நேருவின் ரஷ்யப் பிரயாணத்தால் யாருக்கு லாபம்?

மாம்பழ வியாபாரிகளுக்கும், தேசிய ஏடுகளுக்கும்!

டி. ஆர். சங்கரன்; ஆம்பூர்.

(?) கடவுளுக்கு வயது என்ன?

மனிதன் காட்டுமிராண்டியாகத் திரிந்தபோதுதான் "அவர்" பிறந்தார். அதிலிருந்து 'அவர்' நோய் வாய்ப்பட்டிருக்கும் இன்று வரையிலே சணக்கெடுத்துப் பாரும்—வயது புரியும்!

நா. ராமகிருஷ்ணன்'நாயர்';
குளித்தலை.

(?) சமுதாயத்தில் பல துறைகளிலும் முதல்வர்களாகப் பார்ப்பனர்கள் இருக்கிறார்களே; அது-அவர்கள் பிர்மாவின் முகத்திலே பிறந்தவர்கள் என்ற காரணத்தினால்தானே?

ஆமாம்; முக விசேஷந்தான் காரணம்!

தயா. ஜெயபால்; காரமடை.

(?) "புத்திசாலிகளுக்கு மந்திரி பதவி கிடைப்பதில்லை" என ஒரு காங்கிரஸ் பிரமுகர் கூறியது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

சொந்தக் கட்சியைப்பற்றி சரியான எடை போட்டு வைத்திருக்கிறார் அந்த காங்கிரஸ் பிரமுகர்—அவ்வளவுதான்!

செல்வராஜ்; பத்ராவதி.

(?) திருச்சியில் நடைபெற இருக்கும் தி. மு. க. மாநில மாநாட்டின் நிகழ்ச்சிகளை வானொலியில் ஒலி பரப்புவார்களா?

திருவையாறு தியாகப் பிரம்ம உற்சவத்தையும், அம்மாஞ்சிகள் கூட்டத்தையும், மடிசஞ்சிகள் மாநாட்டையும் மட்டுந்தான் அந்த வானொலியில் ஒலி பரப்புவார்கள் — நம்முடைய மாநாடுகள் ஒலி பரப்பப்படும் காலம் விரைவிலே வந்து தீரும்; கவலைப்படாதீர் நண்பரே!

> இந்த வாரம் பரிசு பெறும் தோழியர்;
> (●) ஏ. சீதாலெட்சுமி
> சத்திரப்பட்டி
> [ராமநாதபுரம் மாவட்டம்]

(●) ஏ. ஜீதாலெட்சுமி;
சத்திரப்பட்டி.

(?) திரு இடம் என்கிற தமிழ்ச் சொல்லையே "தமிழ்ச் சொல் அல்ல" என்று மறுத்துரைப்பவர்கள், காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் என்கிற வேற்று மொழிச் சொற்களைப் பற்றி வாய் திறக்காதிருப்பதேன்?

தி. மு. கழகம் எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும் மறுக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு கைக்கூலி பெற்று வாழ்பவர்களிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும், சகோதரி!

ச. தங்கராசன்; மதுரை.

(?) "முரசொலி" முன் பக்கத்தில் ஒரு மனிதன் உலகத்தைத் தாங்கிக் கொண்டிருப்பது போல் உள்ளதே, அது எதைக் குறிக்கிறது, எழுத்தாணியாரே?

உலகம், உழைப்பாளியின் சொத்து என்பதைக் குறிக்கிறது.

சி. இல. சுந்தரேசுவரன்;
கோல்லைக்கோம்பை.

(?) இன உணர்ச்சிக்கும், இன வெறிக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கவும்,

டில்லியிலே ராமலீலா நடத்தி, ராவணன் உருவத்திலேதீயிட்டு மகிழ்வது (ஆரிய) இனவெறி! அது கண்டு கொதித்தெழுவது (திராவிட) இன உணர்ச்சி!

இரா. செல்வத்துரை; மதுரை.

(?) நேரு மாதிரி மனிதர்கள், ஆவடி மாதிரி ஊரிலே மாநாடு மாதிரி கூடி, சோஷலிசம் மாதிரி தீர்மானம் போடுவது மாதிரி போட்டு, நிறைவேற்றுவது மாதிரி நிறைவேற்றினார்களே; அந்த 'மாதிரி' இப்போது எந்த மாதிரி இருக்கிறது?

காங்கிரஸ்காரர்கள் அடுத்த தேர்தலில், எம். எல். ஏ., எம். பி.க்கள் மாதிரி ஆகி, மந்திரி மாதிரி பதவிகளில் அமர்ந்துவிட்டால், இந்த சோஷலிச மாதிரியும்—செத்தது மாதிரிதான்!

அற்புதசாமி; சென்னை-5.

(?) பெரியார் ஆரம்பிக்கும் இந்தி எதிர்ப்பு ரகசியப் போராட்டத்தில் தி. மு. கழகம் கலந்து கொள்ளுமா?

தி. மு. கழகம், எதையு ப் டகிரங்கமாக அறிவித்து விட்டுத்தான் அறப்போரில் ஈடுபடும். திராவிடர் கழகத்தோடு சேர்ந்து போராடுமா-அல்லது தனித்து நின்று போர்க் கொடி உயர்த்துமா-என்பது பொதுக் குழு தீர்மானிக்க வேண்டிய விஷயமாகும். திருச்சியில் அண்ணா அவர்கள் கூறியது போல, தி. மு. கழகப் பொதுச் செயலாளரும், திராவிடர் கழகத் தலைவரும் சந்தித்து, அதன் பிறகு எடுக்கப்படும் முடிவு தான் கூட்டுப் போர் முறைக்கு வலிவூட்டக் கூடியதாக அமைய முடியும்.

தண்டபாணி; சிதம்பரம்.

(?) பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தற்போதைய நிலைமை பற்றி உங்கள் கருத்து என்ன?

அது ஒரு **'அரசியல் தொட்டாற் சுருங்கி'!** ஆவடியிலே பண்டிதர் அதை 'சோஷலிச பாணி' என்னும் போலிக் கரத்தால் தொட்டார்—இப்போது அது விரிய முடியாத அளவுக்கு சுருங்கிவிட்டது!

கேசவன்; சித்தூர்.

(?) சக்தி வாய்ந்தவர்கள் யார்—உயிருள்ளவர்களா? செத்தவர்களா?

மாவீரனின் பிணங்களுக்கு உள்ள சக்திகூட சில சமயம் நடைப்பிணங்களுக்கு இருப்பதில்லை. வேண்டுமானால் பொட்டி சீராமுலுவையும், பிரகாசத்தையும் உதாரணமாக்கிக் கொள்ளுங்கள்!

அங்கப்பன்; ஈரோடு.

(?) 'சாலூர்' எப்படியிருக்கும்?

அந்த ஊருக்குப் போகிற வழி ஒரு 'ஒன்-வே-டிராபிக்'! போனவர்கள் திரும்பி வந்து எழியுரைப்பதில்லை!

நாகலிங்கம்; கோவை.

(?) தற்கொலை என்பது என்ன?

முன்னறிவிப்பு ஏதுமின்றி வாழ்க்கையை 'ராஜிநாமா' செய்வதைத்தான் தற்கொலை என்கிறார்கள்!

> மின்சார 'மோட்டாரி'ல் திடீரென்று ஏற்பட்ட பழுதின் காரணமாக, இவ்வார 'முரசொலி' ஒருநாள் தாமதமாக வருகிறது. அடுத்த வாரம் முதல் இந்தக் குறை நேராது எனத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## 'முரசொலி'
### சந்தா விபரம்

**உள்நாடு-இலங்கை**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6-0-0 |
| 6-மாத சந்தா | 3-8-0 |

**வெளிநாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4-0-0 |

மூன்று மாத சந்தா கிடையாது.

இவ்வார முரசொலி இதழில் குறளோவியம் கண்டோம். அது வறுமையின் படப்பிடிப்பு—வாட்டத்தின் பிரதிபலிப்பு—கொடுங்கோலராம் கோவில் பெருச்சாளிகளுக்கு ஓர் கொடுவாள்! உள்ளமுருக்கும் சித்திரம் எழுதுங்கள் இது போல் பல; ஏற்றம் கொள்வோம் நாம்; வாழ்க குறளோவியம்!

—எஸ். சரளாமணாளன்,
—ஆர். எஸ். கமலாவதி,
பரமக்குடி.

இரப்பாரை நோக்கி, இரந்து நிற்கும் இறையனாரின் உள்ளப் பாங்கினை அப்படியே தங்களது 'குறளோவிய'த்தில் வண்ணமாக வரைந்துள்ளீர்கள். இல்லாமை நிறைந்த நாட்டில், இக்குறள் ஊன்று கோலாக நின்று மக்கள் இரத்தல் தொழிலைச் செய்யாதிருக்க உதவுமாக.

—நா. ஜெயராமன்,
விருதை.

17-6-55 'முரசொலி' இதழில் தாங்கள் குறிப்பிட்ட 'ஜனசக்தித் தமிழ்' வெகுஜன வீரர்களுக்கு நல்ல விளக்கமாகும். எதிர்காலத்தில் பரந்த நோக்கத்தாரின் அரசியல் சரிவுகள் அடையப் போகும் விபரீதங்கள் நமது சுழல் விளக்கின் ஒளியிலே தென்படுகின்றன. மகிழ்ந்தேன். பாராட்டுகிறேன்.

—க. கூடலரசன்,
சேலம்.

சிறந்த கருத்துக்கள் கொண்ட பதிலைத் தருவதின் மூலம், கேள்கள் கேட்கும் என்னைப் போன்றோருக்கு மிகவும் ஊக்கம் தரப்படுகிறது-எழுத்தாணியாரே, நன்றி!

—முகிலன்,
வடுகை.

அரசியல் சேற்றை சந்தனவாடை எனக் கருதிடும் சாக்குப் போக்காளர்களுக்கு. தலையங்கம் தந்த "அமெரிக்க நெய்" வயிற்றை மட்டும் கலக்காமல்' அவர் தம் சிந்தனையைக் கலக்கட்டும்.

—துரை. முருகேசன்,
காரமடை.

சென்ற வாரம் 'குற்றம் இருந்தால் மறுப்பு கூற வரலாம்' என்று 'சக்ரவர்த்தியின் திருமகனில்' சவால் விட்டும்' இதுவரை யாரும் முன் வராதது ஆச்சாரியார் எழுதுவது அனைத்தும் அபத்தம் என்பதைத்தானே காட்டுகிறது.

—இரா. சந்திரா நடராசன்,
கோவை.

'குறளு'க்கு ஒரு கதை! குழந்தைகள் இலக்கியத்திற்கு "பிறை வானம்" அளிக்கும் ஒரு புது வரவு.

—ப. கந்தசாமி,
திருச்செங்கோடு.

முரசொலியில் ஒரே ஒரு குறை. எழுத்துக்கள் பெரிதாக இருப்பது. எழுத்துக்களைச் சுருக்கி விஷயங்களைஅதிகமாக்க வேண்டும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

—சுப. கணேசன்,
திருச்சி.

அச்சிடுபவரும், அச்சிடுவோரும், வெளியிடுவோரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.